Registered as a News Paper    பக்கங்கள் 10    விலை: ரூபா 6-60

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    சித்திரை 03    [16-04-93]    வெள்ளிக்கிழமை    ஓசை 57

## மேதின ஏற்பாடு குறித்து நாளை கலந்துரையாடல்

உழைக்கும் மக்களது தினமாகிய மேதினத்தை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளையிட்டு கலந்தாலோசிப்பதற்கான கலந்துரையாடல் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பணிமனை கோண்டாவிலில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. அனைத்து தொழிற்சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், சனசமூக நிலைய சமாஜங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு - பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், [10 ஆம் பக்கம் பார்க்க]

# மன்னார்தீவில் அதிரடி; 5 படையினர் பலி

(மன்னார்)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் பட்டினத்திலிருந்து தலைமன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் ட்ரக் வண்டி ஒன்றின் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடாத்திய கரந்தடித் தாக்குதலில் ஒரு கப்டன் உட்பட 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், இருவர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். இவர்களிடமிருந்த ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைபபற்றப்பட்டன அவர்கள் பயணம் செய்த ட்ரக் முற்றாக சேதமாக்கப்பட்டது. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

முற்பகல் 11.45 மணியளவில் கோணர்பண்ணை ஓலைத் தொடுவாய் சந்தியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இக் கரந்தடித் தாக்குதல் இரண்டு நிமிடம் மட்டுமே இடம்பெற்றது.

இதேவேளை பேசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புலிகளின் தாக்குதலில் ஓர் இராணுவக் கப்டன் உட்பட ஐந்து இராணுவத்தினர் பலியாகிய தாகவும் அதனையடுத்து அப் பகுதியில் தேடுதல் நடாத்தப்படுவதாவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி56-2ரக துப்பாக்கிகள் -03
- ★ ரி 81 ரக துப்பாக்கி -01
- ★ நடுத்தர ரவைகள் -440
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -04
- ★ ரி 56 ரவைக்கூடுகள் -15
- ★ ரி 81 ரவைக்கூடுகள் -03
- ★ ஏ. கே. கோல்சர் -04
- ★ தொப்பி -05

## சில்லாலையில் கடும் சண்டை

# புலிகளின் உக்கிர தாக்குதலால் ராணுவத்தின் முயற்சி முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

**நேற்றுக் காலை வலி- மேற்கில் காவலாண்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. நண்பகல் வரை நீடித்த இம் மோதலின் போது இராணுவத்தினருக்கு துணையாக விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்திகளும் தாக்குதலில் ஈடுபட்டன. இருப்பினும், புலிகள் மேற்கொண்ட பலமான எதிர் தாக்குதலினால் இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கி முகாம் திரும்ப வேண்டி ஏற்பட்டது,**

நேற்றுக் காலை 7-30மணியளவில் இம் மோதல் மூண்டது. பண்டத்தரிப்பிற்கும், சில்லாலைக்கும் இடையே காணப்படும் இராணுவக் காவலரண்களிலிருந்து கவசவாகனங்கள் சகிதம் வெளியேறிய இராணுவத்தினரைத் தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் உக்கிரத் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலின்போது இராணுவத்தினருக்குத் துணையாக விமானப்படைக்குச் சொந்தமான 'புக்காரா' விமானம் ஒன்றும், 'சியாமாசு செட்டி' விமானங்கள் இரண்டும், உலங்கு வானூர்தி ஒன்றும் பலத்த குண்டுவீச்சுத் தாக்குதலையும், கலிபர் தாக்குதலையும் பரந்தளவில் மேற்கொண்டன.

7-30 மணியிலிருந்து நண்பகல் 12-30 மணிவரை தொடர்ச்சியாக நான்கு மணித்தியாலங்கள்வரை இம் மோதல்கள் இடம்பெற்றன. அதன் பின்னர் இராணுவம் தனது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பியது.

இருப்பினும் நண்பகலுடன் மோதல் தணிந்தபோதும் தொடர்ச்சியாக பிற்பகல் வரை அப்பகுதியில் விமானத் தாக்குதலும் பலத்த எறிகணை வீச்சும் இடம்பெற்றன.

## பண்டத்தரிப்பில் குண்டு வீச்சால் கட்டடங்கள் முற்றாக நாசம்

### பாடசாலைகள், கடைகள், வீடுகள் சேதம்

(நமது நிருபர்)

வலி மேற்கில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய கடும் தாக்குதல்களினாலும் அகோர எறிகணைத் தாக்குதல்களினாலும் பாடசாலை, வைத்தியசாலைகள், ஆலயம், குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் உட்பட பல கோடிக் கணக்கான சொத்துக்கள் நாசமாகின.

நேற்றுக் காலை 7. 30 மணி முதல் மாலை 3 மணிவரை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா குண்டு வீச்சு விமானம் இரண்டு, சியாமாசு செட்டிரக குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் உலங்குவானூர்தி ஆகியன பண்டத்தரிப்பு, பிரான்பற்று, வடலியடைப்பு பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது அகோர குண்டு வீச்சு தாக்குதல்களை நடாத்தின.

புக்காராவிமானம்நடாத்திய குண்டு வீச்சுகளினால் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பலத்த சேதமடைந்ததுடன் அல்போன்ஸ்ஸஸ் அத்தனாசியார், சென்றல் வைத்தியசாலை, சிறிகிருஷ்ணா வைத்தியசாலை கட்டடங்கள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனை நிலையம், கிராமிய வங்கி, பேக்கரி ஆகியன பலத்த சேதமடைந்துள்ளன.

சந்தைப் பகுதியில் மேற்கொண்ட குண்டு வீச்சு தாக்குதல்களினால் மாடிக் கட்டடங்கள் தரைமட்டமாகியதுடன் பண்டத்தரிப்பு பட்டனசபை அலுவலகம், நூல்நிலையம் என்பனவும் பதினைந்திற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன. புக்காராவின் இத்தாக்குதல்களினால் பண்டத்தரிப்புநகரம் சுடுகாடுபோல் காட்சியளிக்கிறது. வீதிகள் தோறும் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளதுடன் சிதறல்கள் வீதிகளில் பரவலாகக் காணப்படுகின்றன, ஹரியட் வின்சிலோ மகளிர் இல்லம் மற்றும் கிறிஸ்தவ தேவாலயம் ஆகியனவும் சேதமடைந்துள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரி இன்று யாழ். விஜயம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலக உயர் அதிகாரியான திரு. தயாளதேவா இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் செயற்பாடுகளை நேரடியாக அவதானிப்பதற்காகவும் கிளைச் சங்கத்தின் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்குமே இவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இன்று மேற்படி கிளையின் உபதலைவர் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டதைக் கண்டித்து கண்டன ஊர்வலம் ஒன்று யாழ். நகரில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### செஞ்சிலுவை அதிகாரி படுகொலை

## இன்று யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவர் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டமையைக் கண்டித்து இன்று யாழ்ப்பாணத்தில் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது. காலை 9. 00 மணியளவில்

( 10ஆம் பக்கம் பார்க்க )

## அன்னை பூபதி நினைவு உண்ணாவிரத நிகழ்வு

யாழ் மாவட்ட ரீதியாக இன்று யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெறும் அன்னை பூபதியின் நினைவு கூரல் உண்ணா நோன்பில், காலை 8 மணிமுதல்மாலை4-30வரை கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இதில் ஒலிப்பதிவு நாடா நிகழ்ச்சி, பஜனை, கவிதை, பாட்டு, கதாப்பிரசங்கம், வீடியோ படம், வில்லுப்பாட்டு என்பனவும் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

## குடிமனைகள் மீது குண்டுவீச்சு; இருவர் பலி; பத்து பேர் படுகாயம்

வலிமேற்கு பகுதிகளான பண்டத்தரிப்பு,சித்தன்கேணி, சங்கானை, சுழிபுரம், நவாலி ஆகிய இடங்களிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் நேற்றுக் காலை 7 30 மணியளவில் ஆரம்பித்த சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்களின் குண்டுத் தாக்குதலினாலும், எறிகணை தாக்குதலினாலும் இருவர் பலியானதுடன் பத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலின் போது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பையா (வயது 65) என்பவர் பண்டத்தரிப்பு பிரான்பற்றில் வைத்து எறிகணை வீச்சுக்குப்பலியானார். மேலும் பண்டத்தரிப்பு பனிப்புலம், காலையடி தெற்கைச் சேர்ந்த சர்மா சிவகரன்(வயது 23) என்பவர் சித்தன்கேணி பிள்ளையார் கோயிலடியில் வைத்து ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகி பலியானார்.

இந்த அகோர எறிகணை வீச்சின்போது பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த ஸ்ரீ, ராசகுமாரி (வயது 8), இலட்சுமிகாந்தன் (வயது 43), தம்பிப்பிள்ளை செல்லத்துரை (வயது 75), பண்ணாகம் விசவத்தனை முருகன் கோயிலடியைச் சேர்ந்த மாணிக்கரத்தி

(10ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### தேவை

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு. கோப்பாய். (சி-6322)

### சேவை

றெணி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்தப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

### செந்தமிழ்ப் பாட்டு இசை நிகழ்ச்சி

யாழோசை மன்றக் கலை மேம்பாட்டிற்காக யாழோசையினருடன் பல பாடகர்கள், பாடகிகள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்ச்சி யாழ் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது நுழைவாயில் ரிக்கற்றுகளை, யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். (4640)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமுன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

### அறிவித்தல்

பெஸ்கி சனசமூக நிலைய, புலேந்திரன் பாலர் பாடசாலை வளர்ச்சிக்காக 14-04-93 அன்று அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 24-04-93 சனிக்கிழமை அதிர்ஷ்டம்பார்க்கப்படும் என்பதை ஆதரவாளருக்கு அறியத் தருகின்றோம். நன்றி (4697)

### கம்பியூட்டர் கல்வி


BASIC LANGUAGE
4 MONTHS
சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்:
17- 04- 1993
10-30 மணி

கூடிய செய்முறைப் பயிற்சி, இலவச அச்சடித்த பாடக் குறிப்பு, பயிற்சி முடிவில் சான்றிதழ்.

கட்டணம்:
மாதம் 400 மட்டுமே.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS ST,
JAFFNA.
[சி- 6434]




1) ஐந்து வெற்றுப் போத்தல்கள் (ஜாம் அல்லது நெல்லிரசம்)கொடுத்து ரூபா 25 பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்

2) மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு – சுவர் கடிகாரம்
2-ம் பரிசு – எவர்சில்வர் வீட்டுப் பாவனைப் பொருள்கள்
3-ம் பரிசு – மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்

மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

3) பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1) ரேஸ்லைன் இன்டஸ்றீஸ்-14, சீனியர்வீதி, யாழ்ப்பாணம்.
2) அறிவகம் – சாவகச்சேரி.
3) சுபாஸ் பேக்கவுஸ் – நெல்லியடி.
4) சுந்தரம் அன் சன் - சுன்னாகம்.
5) சித்திவிநாயகர் நூல்நிலையம் - ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6317)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



கடற்புலி

## கப்டன் நாயகன்

(சிவலிங்கம் கேசவன்)

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 19 - 05 - 1973 | 16 - 01 - 1993 |

வங்கக் கடலிலே வலம்வந்த கலத்திலே
தங்கத் தமிழீழம் தனைக்காண ஓடிவந்த
எங்கள் நாயகர் பதின்மரின் பார்வையிலே
காந்திய தேசத்து கடற்படை தெரிந்தது.

பக்கத்தே வந்த பாரதப் பாதகர்கள்
பத்துப் புலிகளையும் பணயமாய்ப் பிடித்திட
சித்தங் கொண்டே சினத்துடன் நெருங்கினர்
சத்திய வீரரின் சாவினைக் குறித்தனர்.

துச்சமென புலிகள் உயிரை நினைத்து
பட்சமுடன் எமக்காய் பலியாக முனைந்து
உச்சநிலைக்கு தமிழை உயர்த்திட நினைத்து
இச்செகம் அதிர இன்னுயிர் நீத்தனர்.

பொங்கிய இப்புலிகளில் சினந்த விழிகளுடன்
பொலிகைமண் பெற்றெடுத்த புலிவீரன் கேசவனும்
தங்கத் தமிழனின் தனிப்பெருமை காட்டிநின்றே
தாயக மீட்பிற்காய் நாயகனாய் தீபமானான்.

நீ மறைந்தாலும் நின்புகழ் வாடாமலராய்
நாளும் மணம் வீசும்.

நீங்காத உன்நினைவுடன் எந்நாளும்
– குடும்பத்தினர்.

ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.
(சி-6434)

## வவுனியா ப. நோ. கூ. ச. உணவுப்பொருள் இல்லை

(வவுனியா)

வவுனியா ப. நோ. கூ. சங்க கிளைகளில் உணவுமுத்திரைக்குரிய உணவுப் பொருள்களை பெறமுடியாமல் இருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஏப்ரல் முதல் புதிய உணவு முத்திரை வழங்கப்பட்டு வந்துள்ளபோதிலும் சங்கங்களில் அவற்றுக்கான பொருள்களை காணமுடியவில்லை. இது குறித்து கருத்து தெரிவித்த கூட்டுறவு அதிகாரி உணவுப் பொருள்களை கொள்வனவு செய்ய பணம் நெருக்கடியாக இருப்பதாக தெரிவித்தார்.

இதேசமயம் வவுனியாவில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பவென லொறிகளில் ஏற்றப்பட்ட பெருமளவுபொருள்கள்படையினரின் சோதனைக்காக15 நாட்களுக்கு மேலாக ஈரற்பெரிய குளத்தில் காத்துக் கிடக்கின்றன எனத் தெரிவித்தார்.

## COMPUTER CLASS IN BASIC LANGUAGE

ஆரம்பம்:

வாரநாள் வகுப்புகள் 15 - 4 – 1993 (4 மாதம்)
வாரஇறுதி நாள் வகுப்புகள் 17 - 4 – 1993 (6 மாதம்)

- இலகு விரிவுரைகள்
- விசேட செய்முறைப்பயிற்சியுடன்கூடியது

குறிப்பு: வார இறுதிநாள் வகுப்புகள் கூடிய செய்முறைப் பயிற்சியும் மேலதிக பயிற்சிகளையும் உள்ளடக்கிய விசேட பயிற்சி நெறி (Special Course).

மேலதிக விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**
14, St. Peters Lane Hospital Road Jaffna.

(சி6021)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-16

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த

அன்பு (மூத்ததம்பி தனபாலசிங்கம்-முள்ளியான்-வெற்றிலைக்கேணி யாழ்)

1986 ஆம் ஆண்டு யாழ்-நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

முரளி/கமல் (நமசிவாயம் கமலநாதன்-கமலநாதன் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி யாழ்)

யாழ்-பருத்தித்துறையில் காவற்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

புவி/பொட்ஸ் (சேதுநாயகம் ரவீந்திரராசா-புலோலி கிழக்கு-பருத்தித்துறை யாழ்)

1988 ஆம் ஆண்டு மன்னார்-வெள்ளாங்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப். முரளி (மரியதாஸ் அன்புமணி-உயிலங்குளம் மன்னார்)

லெப். தான்பரீன் (சின்னையா ஜெயக்குமார்-கிராஞ்சி பூநகரி-மன்னார்)

1989 ஆம் ஆண்டு கொழும்பில் ஜே.வீ.பி.குழுவினர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்

1991 ஆம் ஆண்டு மன்னார்-அடம்பன், ஆட்காட்டி வெளிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

2ம்-லெப். ரைகன் (சின்னத்தம்பி விமலேஸ்வரன்-சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

இளங்கோ (தா. மகோராஜ் விவேகானந்தா வீதி, புதுக்குடியிருப்பு - மட்டு)

1992 ஆம் ஆண்டு மாரடைப்பு நோய் காரணமாக எமைப் பிரிந்த

மேஜர் வளர்மதி (சாந்தி செல்லத்துரை - நாகதம்பிரான் வீதி, கண்ணகிபுரம், வாழைச்சேனை மட்டு)

பாலதுரப்பகுதியில் 21.03.1992 அன்று பொலநறுவை குவாட்டஸ் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய

லெப். பவளராஜன்/கர்ணன் (வடிவேல் ரவிச்சந்திரன்-பெரியகல்லாறு-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6424]

Chundikuli Branch Library

# மாகாணசபை தேர்தலில் தமிழ் குழுக்களின் திரிசங்கு நிலை

ஏழு மாகாண சபைகளுக்குமான 366 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் மே 17 இல் சிறிலங்காவில் நடைபெறவுள்ளது. பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 2350 வேட்பாளர்கள் 9,300,823 வாக்காளர்களின் வாக்குகளையும் பெறுவதற்காக 8 198 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. ஏழு மாகாணங்களிலும் இருக்கும் பதினேழு மாவட்டங்களிலும் ஐ.தே.க. தலைமையிலான அணியும், சு.க. தலைமையிலான பொது மக்கள் முன்னணியும், ஐ.ஜ.தே.மு. அணியினரும் மும்முனைப் போட்டியில் ஈடுபட்டுள்ள போதும் இடதுசாரிகளின் அணியும், சுயேட்சைக் குழுக்களும் கூட தேர்தல் களத்தில் இறங்கியுள்ளன.

இந்தத் தேர்தல்களின்போது இடம்பெறக் கூடிய மோசடிகளைக் கண்காணிப்பதற்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும, சுதந்திரக் கட்சியும் ஒரு குழுவை அமைத்துள்ளன. இக்குழு சுதந்திரக் கட்சியின் டார்லி வீதி அலுவலகத்தில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படவுள்ளது. ஏழு மாகாணங்களிலும் இருந்து கிடைக்கப் பெறும் பல்வேறு முறைப்பாடுகளையும் கவனத்திற்குப் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளவும், தேர்தல் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு இம் முறைப்பாடுகள் பற்றி அறிவிப்பதும் இக் குழுவினரின் கடமைகளாக இருக்கும் என்று கூறப்படுகிறது. 1977 - 89 வரையான காலப்பகுதியில் ஐ.தே.க. முன்னணிப் பிரசார பீரங்கிகளாக விளங்கிய லலித் அத்துலத் முதலியும். காமினிதிசாநாயக்காவும் (1981 மாவட்ட சபைத் தேர்தல்களின்போது யாழ்ப்பாணத்தில் இவர்கள் செயற்பட்ட விதம் தேர்தல் காலத்தில் ஏற்படக் கூடிய மோசடிகளுக்குப் பொருத்தமான முன் உதாரணம் என்பது குறிப்பிடத்தக்கது.) எதிரணியில் இருப்பது எதிர்க்கட்சியினர் தேர்தல் கால மோசடிகளைக் கண்டுபிடிக்கவும், அம்பலமாக்கவும் பெரும் துணை புரியும் என்றே நம்பப்படுகிறது. இந்த வகையில் பொலிஸ் திணைக்களத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் பற்றி எதிர்க்கட்சிகள் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பதாக சொல்லப்படுகின்றது. இதே வேளை வேட்பாளர் தெரிவின்போதும், நியமனம் வழங்கப்பட்டபோதும் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் முக்கிய தலைவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கும், உறவினர்களின் வாக்குவங்கிகளைத் திருப்திப் படுத்தும் வகையிலும் தான் தெரிவு நடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. இவ்வகையில் சுதந்திரக் கட்சியினால் புறக்கணிக்கப்பட்ட சிங்கள திரைப்பட நடிகர்ஒருவர் லங்கா சமசமாஜக் கடசியின் தேர்தல் டிக்கட்டின் கீழ் வடமேல் மாகாண சபைக்கு போட்டியிடுவதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## தேர்தல் பிரசாரங்களின் முக்கிய தொனிப்பொருள்

ஐக்கிய தேசிய கட்சியானது வடக்கு,கிழக்குபிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதற்கான மக்கள் ஆணையை இத் தேர்தல்களின் போது எதிர்பார்ப்பதாக பிரசாரத்தின் போது கூறி வருகின்றது. ஆனால் வடக்கு, கிழக்குபிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு திட்டமாகவே மாகாண சபைகள் அறிமுகமானதும், இப்போதுமாகாணசபைத் தேர்தல்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தில்மட்டும் நடைபெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணசபை என்பது ஒரு குறைமாத பிரசவமாக அவதரித்து முளையிலேயே கருகிப் போயிருக்கின்றது என்பதை அனைவரும் அறிவர்.

மேலும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்போ அல்லது வேறெந்த அரங்கிலுமோ இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டம் என்று கூறக் கூடிய எதையும் முன்மொழியாத ஐ தே. க. வெள்ளைத் தாளில் கையெழுத்துப் போடுவதைப் போல மக்கள் மத்தியில் தனது பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது.

## இளையவன்

இதே வேளை சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது மக்கள் முன்னணியோவடக்கு, கிழக்கின் நிலை பற்றியோ, இனப்பிரச்சினை பற்றியோ இறுக்கமான மௌனத்தைக் கடைப்பிடிக்கும் அதேவேளை அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல் விவகாரங்களையும், வாழ்க்கைச்செலவு உயர்வுப் பிரச்சினையையும் 'ஜனநாயகம்' என்பதை மீட்டெடுத்தல் என்பதையும் தமது தேர்தல்பிரசாரங்களின்போது முக்கியத்துவப்படுத்த முனைந்துள்ளது. இக் கூட்டணியினரின் தேர்தல் பிரசாரங்கள் இன்று(வெள்ளிக்கிழமை)முதல் தான் ஆரம்பமாகவுள்ளது. என்பதும் இதில் மலேசியாவிலிருந்து திரும்பும் திருமதிசிறிமாவோ கலந்துகொள்ளஇருக்கிறார் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியானது, ஒவ்வொரு மாகாணத்திலும் இருக்கக் கூடிய விசேடமான தனித்துவமான விவகாரங்களை இனங்கண்டு அவற்றிற்கு முக்கியத்துவம் சொடுத்துப் பிரசாரத்தில் ஈடுபட இருப்பதாக கூறப்படுகின்ற போதும் பொதுச் செயலாளர் ஜி எம், பிரேமச்சந்திராவின் கூற்றுப்படி அரசாங்க தரப்பினர் எழுப்பும் குரல்களுக்கு பதிலளிபபதாகவே தமது பிரசாரம் அமையும்எனத் தெரியவருகிறதுஇதனால்ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் சுமத்தப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டதான குற்ற விசாரணைப் பிரேரணை பற்றிய விவகாரமும் மக்கள் மன்றத்தில் அலசப்படும் வாய்ப்பு காணப்படுகின்றது.

## திரிசங்கு சொர்க்கத்தில்

சிறிலங்காவில் நடைபெறும் இந்த மாகாணசபைத் தேர்தல்கள் கொழும்பில் இருக்கும் தமிழ்க்குழுக்களை பெரும்பாலும் திரிசங்கு சொர்க்கத்தில் தள்ளிவிட்டுள்ளது என்பது மிகையானதல்ல. பாராளுமன்ற தெரிவுக் குழு முன் வைத்திருக்கும் தீர்வுத்திட்டத்தால் ஏமாற்றப்பட்டுவிட்டதாக பறைசாற்றிக் கொண்டிருக்கும்இக் குழுக்கள் வெளிப்படையாக ஐ.தே.கவை ஆதரிக்க முடியாத நிலை ஒருபுறம். 'அரசியல் கட்சி' என்ற வகையில் 'நாட்டில்' ஒரு தேர்தல் பற்றி கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது என்ற எண்ணம் மற்றொரு புறம். எவரையும் ஆதரித்து அல்லது எதிர்த்து அறிக்கை எதையும் விடுக்காமல் மௌனமாக இருக்கலாம் என்று சிந்தித்தாலும் அது அரசின் செயற்பாட்டை ஆதரிக்கவில்லை என்று அர்த்தப்படுத்தப்பட்டு விடலாம் என்ற அச்சம்'இன்னொரு புறம். சிறிலங்கா அரசுக்கு குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் பிரேமதாசாவுக்கும் தமது விசுவாசத்தைப் புலப்படுத்த இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தலாம் என்ற ஆதங்கம் இன்னுமொரு பக்கம். இவ்வாறான 'பலத்த' சிந்தனைகளுக்கும் மத்தியில் ஒவ்வொரு குழுவினரும்ஒவ்வொரு முடிவை மேற்கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 'தொங்கு தசை'யாகப் போயிருக்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி எனப்படும் ஈ.பி.டி.பி. சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் பிரேமதாசாவையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் ஆதரிப்பதாக பகிரங்கமாக தெரிவித்துள்ளது. வவுனியாவில் தமது நலன்களைப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு, புளொட் குழுவினரும், மட்டக்களப்பின் சில பகுதிகளில் நடமாடுவதை நோக்கமாகக் கொண்டு ரெலோ குழுவினரும், 'ஈரோஸ்' குழுவினர் கொழும்பில் தங்கியிருப்பதை இலக்காகக்கொண்டும், ஈ.பி ஆர்.எல்.எவ் இனர் தமது இந்திய எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்கும் இத்தேர்தல் சூழ்நிலையை பயன்படுத்த முயல்வதாகக் கூறப்படுகிறது. அதாவது எப்படிப் பார்த்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியில் குறிபபாக அதன் தலைமைத்துவத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் இக்குழுக்கள் எதுவும் தைரியத்துடன் செயற்படும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை

இந்தச் சூழ்நிலையில்தான் ஐக்கிய தேசியக் கட்சியை அல்லாமல் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ் வேட்பாளர்களை ஆதரிப்பதாக 'ஈரோஸ்' குழுவினர் தீர்மானித்துள்ளனர். இ தொ.கா வேட்பாளர் ஐ.தே கவின் தேர்தல் சின்னத்தின் கீழ், ஐ.தே.கவின் நியமனத்தை பெற்று போட்டியிடுகின்றார்கள் என்பதால் அரசை ஆதரிக்கின்றோம் என்பதை வெளிப்படையாகச் சொல்லத்தயங்கி இ.தொ.காவையே ஆதரிப்பதாக 'ஈரோஸ்' மழுப்பல்தனமான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது இதன் மூலம் தமிழர் நலனையும்,அரசையும் ஒரேநேரத்தில் ஆதரிப்பதாக 'ஈரோஸ்' காட்டிக்கொள்ள முடியும்என்றுகூறப்படுகின்றது

புளொட் குழுவினர் எந்த முடிவையும் இன்றும் பகிரங்கமாக்கவில்லை என்றாலும் பொதுதேர்தலின்போது தமது கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுக்கு எதிராக தொண்டமானை ஆதரிப்பது அவர்களுக்கு சிரமமாக இருக்கக் கூடும். தற்போது தடுப்புக் காவலில் இருக்கும் சந்திரசேகரனும் அவரது சகாக்களும், மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் சுயேட்சை அணியாக தேர்தல் களத்தில் உள்ளனர்.

அரசாங்கத்தையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரிக்காவிட்டால் கொழும்பிலுள்ளஇக்குழுக்கள் வெகுசுலபமாக துடைக்கப் பட்டு விடலாம் என்பது ஒரு புறம். ஆயுதபாணிகளாக கொழும்பில் நடமாடும் இவர்களால் தமிழர்கள் மட்டுமன்றி சிங்கள. முஸ்லிம் மக்களும் அச்சத்தோடும், பீதியோடும் வாழ வேண்டியிருக்கிறது என்றும், எனவே நிராயுதபாணிகளாக்கப்பட வேண்டும் என்றும் தென்னிலங்கை எதிர்க் கட்சிகள் குரலெழுப்ப ஆரம்பித்துள்ளன.

## வெற்றி வாய்ப்புகள் பற்றிய கணிப்பீடு

காலி, மாத்தறை அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய தென்மாகாணத்திலும், இரத்தினபுரி மாவட்டதை உள்ளடக்கிய சப்பிரகமுவ மாகாணத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை மிக ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள்சுட்டிக்காட்டியுள்ளன, ஜே.வி பி.யினரின் கிளர்ச்சி நடவடிக்கைகளை ஒடுக்குவது என்ற பெயரில் நடந்த பல படுகொலைகள் இப்பகுதியிலேயே இடம்பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குருநாகல், புத்தளம், அநுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய வடமேல் மாகாணத்தில் ஐதே.க வின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்படுவதாக தகவல்கள் கூறும் போதும் ஏனைய நான்கு மாகாணங்களிலும் மும்முனைப் போட்டி மிகக் கடுமையானதாகவே இருக்கும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

1988ஆம் ஆண்டில் நடந்த மாகாணசபைத் தேர்தலின் போது பல வாக்களிப்பு நிலையங்களில் மிகக் குறைந்தளவு வாக்குகளே செலுத்தப்பட்டிருந்தன என்பதும் மோசடிகள் இடம்பெறுவதற்கு பலவாய்ப்புகள் இப்போதும் இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1988இல் பதவியேற்ற பின்னர் பிரேமதாச எதிர்கொள்ளும் முதலாவது பிரதான தேர்தல் களம் இதுவாகும். இத் தேர்தல் களத்தில் சிறீலங்காவின் அரசியற் கட்சிகள் பலவும் பிளவுண்டு போயுள்ளன. ஐ.தே.க விலிருந்து காமினி - லலித் கோஷ்டி பிரிந்து போனதும், சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் சகோதரச் சண்டைகளும், ஐதேக விற்குள் நிலவும் குத்து வெட்டுக்களுக்கும் மத்தியில்இத் தேர்தல் இடம் பெறுகின்றது ஓசி அபயகுணசேகர, மோதிலால் நேரு போன்றோர் ஐ.தே. கவுடன் இணைந்து கொண்டுள்ளமை அவர்களது உண்மைத் தோற்றத்தைஇனங்காட்டுவதாகும்,

இத் தேர்தல் களம் நாடுஎதிர்நோக்கும் எரியும் பிரச்சினைகளுக்குதீர்வுகாண்பதை நோக்கமாகக் கொண்டோ, அல்லது பொதுவான, சமூகப் பிரச்சினைகளை அலசுவதை இலக்காகக் கொண்டோ அமைக்கப்படவில்லை என்பதால் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தை நிலைநாட்டும் பலப்பரீட்சைக்களமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இத் தேர்தல் முடிவுகள் ஆளும் கட்சிக்கு சாதகமானதாக அமைந்தால் நாடு மேலும் சில தேர்தல்களை இந்தப் புது வருடத்தில் சந்திக்கக் கூடும்.

## கரைந்தாய் தாயே கற்பூர தீபமே

கரைந்தாய் தாயே கற்பூர தீபமே
எட்டுத் திசையும் விடுதலையின் தேவை சொல்ல
விரைந்தாய் தாயே விடுதலைத் தீபமாய்
தமிழீழ மண்ணிற்கு உயிர் கொடுத்த உத்தமி நீயே
(கரைந்தாய் தாயே...)

தமிழீழ தாகந் தீர்க்க தாகத்தோடு நீ கிடந்தாய்
தமிழன்னை பசிதீர்க்க பட்டினியாய் நீ கிடந்தாய்
பாரதத்தின் காடையர்க்குன் பட்டினியோ தெரியவில்லை
பாதகத்தைப் புரிபவர்க்கு பசி தாகம் ஏன் புரியும்
(கரைந்தாய் தாயே...)

தமிழுலகின் மறம் போற்ற எம் இனத்தின் தாயானாய்
ஓங்கி அறைந்தாய் தாயே காந்திவழி வந்த கயவனுக்கு
பாடை அனுப்பினால் பைந்தமிழனின் பட்டினி தீருமோ
சோறு போட்டால் சுதந்திரம் கிடைக்குமோ?
(கரைந்தாய் தாயே...)

உணவுப் பொட்டலத்துடன் ஓடி வந்த பாதகன்–உனை
பட்டினிப் பொட்டலமாய் பாடை கட்டினானம்மா
தன்னலம் காக்க வந்த பாதகப் படைகள் இங்கு–பல
தேசம் காண பாடைகளுடன் ஓடினான் பாரதத்திற்கு
(கரைந்தாய் தாயே...)

கோ. தமிழ்த்திலகன் (லம்பா)
அரசியல்துறை.

# உலகை அச்சுறுத்தும் ஆயுதங்கள்;

# வல்லரசுகளால் பெரும் ஆபத்து!

இன்றைய உலகில் பல நாடுகள் நிம்மதியின்றி வாழ்வதற்கும், உலக சமாதான அச்சுறுத்தலுக்கும் காரண கர்த்தாக்கள் வல்லரசுகளே. தற்போது வல்லரசுகளிடம் இருக்கும் ஆயுதங்களே மிகமிக பயங்கரமானவை. இதைவிட, மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதங்களை வல்லரசுகள் தயாரிப்பதால், இன்னும் சிறிது காலத்தில் மனித குல அழிவின் விளிம்பிற்கே இட்டுச் செல்கின்றன. இதில் அமெரிக்காவே முன்னணியில் நிற்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## அணு ஆயுதங்கள்

அணுக்குண்டின்தாக்கத்தை, பாதிப்பை உணர்ந்த நாடு ஜப்பான் ஆகும். 1945 ஆகஸ்ட் 6 இல் ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி மீது அமெரிக்கர்கள் அணுகுண்டுகளைப் போட்டதன காரணமாக 300 ஆயிரம் மக்கள் வரையில் மாண்டனர். அன்றிலிருந்து உலகம் அணு ஆயுத யுதத அச்சுறுத்தலின் கீழயே வாழ்ந்து வருகிறது.

இன்றுள்ள. நவீன நியூக்கிலியர் குண்டு வெடிப்பிலிருந்து கிளம்பும் தடித்த புகை மூட்டங்கள் வளிமண்டலத்தில் பரவி சூரியனை மறைத்து பூமியை காரிருளில் மூழ்கடித்துவிடும். நியூக்கிலியர் யுத்தம் வெடித்த ஒரு மாதத்தினுள்ளே வளிமண்டலத்தின் வெப்பநிலை 15.2 டிகிரிகளால் வீழ்ச்சியுறும். இதன் பயனாக நீர ஊற்றுக்கள் உறைந்துவிடும்- எல்லா உயிரினச் சூழல் நிகழ்வுகளும் நின்றுவிடும். சூரிய ஒளி இல்லாததால் சமுத்திரத்தில் ஜீவனத்திற்கான அடிப்படை அழிந்துவிடும்.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அமெரிக்காவிலுள்ள பிரதான நகரங்களைச் சுட்டெரிக்க 100, 150 மெகாதொன் நியூக்கிலியர் எரிபொருள் போதுமானதாகும். அமெரிக்காவின் முதலாவது நியூக்கிலியர் நீர்மூழ்கிக் கப்பல மட்டும் 100மெகாதொன் நியூக்கிலியர் எரிபொருளை எடுத்துச் செல்கிறது. இதுவே இந்த வையகத்தின் உயிரினங்கள் அனைத்தையும் அழித்தொழித்துவிட முடியும்.

தற்போது. சர்வதேசக்கடல்களில் நிலைகொண்டுள்ள எந்தவொரு கப்பலில் இருந்தாவது சாதாரண அளவுடைய ஏவுகணைகளில் ஒன்று ஐந்து கிலோ கிராம் கொண்ட ''புளூ டோனியம் 39'' ஏவுகணை -வெடிக்குமானால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவார்கள்.

இவ் ஏவுகணை வெடிப்பால் வெளிவரும் கதிரியக்கத் துகள்கள் காற்று மண்டலத்துடன் கலந்து ''மரணமேக மூட்டத்தை உருவாக்கும்''. அணு சக்தியால் இயங்கும் கப்பலில் உளள ஓர் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் கூட மேற்குறிப்பிட்டது போன்ற விளைவுகள் ஏற்படும்.

மேலும் இன்று உலகில் பல பாகங்களிலும்நிகழும் அணுக்குண்டு சோதனைகளால் ஏற்படும் கதிரியக்கம் (நச்சுவாயுத் துகள்கள்) காற்று மண்டலத்துடன் கலந்து, ஓசோன் ($O_3$) படையை அழிக்கின்றன.

## நச்சுவாயுக்கள்

1984 டிசம்பர் மாதம் போபால் பேரழிவுக்குக் காரணமான ஒரு கிருமிநாசினித் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட பயங்கர வாயுக் கசிவு - (மீதையில் ஐசோ சயனைட் வாயு பல்லாயிரக்கணக்கான மக்களைக் காவு கொண்டது. இந்த வாயுக்கசிவு ஏற் டுத்திய தாக்கம் இன்னும பல வருடங்களுக்கு சந்ததி சந்ததியாக பாதிப்பை ஏற்படுத்துவதாயுள்ளது. இன்னமும் இரசாயன விபத்துக்கள் தொடர்பான செய்திகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றது.

விண்வெளிப் பயண ரொக்கட் கழிவுகள, விமானங்கள்க்குகினற நச்சுப் புகைகள், தொழிற்சாலைகள் வெளியேற்றும் நச்சுப் புகைக் கழிவுகள் போன்றன ஓசோன் கவசத்தைச் சிதைவடையச் செய்கின்றன. இதன் காரணமக 'அல்ட்ரா வயலட்' கதிர்கள் பூமியை அடையும். இதனால் தோல் புற்றுநோய். கண், உதடு, தோல் - ஊறுகள் ஏற்படல், பூமியின் செடி, கொடி அனைத்தும் அழிதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படும். மனிதனில் இப்பாதிபுக்கள் பல தலைமுறைகளை நாசமாக்கலம். இந்த மோசமான ஊதாக் கதிர்கள் பூமியில் விழாது தடுப்பது ஓசோன் படைதான். இதில் ஓட்டை விழுந்தால்......?

## தபாலில் நச்சுப் பொருள்கள்

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் தபால் மூலம் மிகக் கொடிய நச்சுப் பொருள்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கடந்த பல வருடங்களாகவே அமெரிக்க விஞ்ஞானிகளும், அமெரிக்க மக்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு எதிராக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

## 'அணு—மினி'

பார்சல்களைக் கையாளும் போது ஏற்படும் விபத்தால், அது அச்சூழலுக்கே பெரும் பாதிப்பாக அமைந்து விடும். இதனால் ஆந்த்ராக்ஸ், துலரெமியா, மூளை க்காய்ச்சல் போன்ற கொடிய நோய்கள் ஏற்படும் என இத்திட்டத்தைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்கும் அட்டர்னி ஜெனரல் ஜான் வான் டி காம்ப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தபால் மூலம் பென்டகன் அனுப்பும் பார்சல்களை எடுத்துச செல்லும் தபால் ஊழியர்கள், அதற்குள் இருக்கும் நச்சுப்பொருளின் அபாயத்தை உணர மாட்டார்கள். இதனால் தபால் ஊழியருக்கோ, அல்லது அனுப்படும் நபருக்கோ பாதிப்புக்கள் ஏற்படும்.

விஞ்ஞான சாதனைகளை இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு எதிராக அமெரிக்காவில் தீவிர எதிர்ப்பியக்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய எதிர்ப்பியக்கங்களில் அமெரிக்க விஞ்ஞானிகளே பெருமளவில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நச்சு இரசாயன கழிவுகள்

உலகின் வல்லரசு நாடுகள், தமது நாடுகளில் தேங்கும் அணு உலைக் கழிவுகள். இரசாயன ஆலைக் கழிவுகள் போன்ற கொடிய நச்சுப் பொருள்களை, கழிவுகளை) ஏதாவதொரு மூன்றாம் உலக நாட்டில், இரகசியமாகக் கொண்டு வந்து கொட்டுகின்றன.

அதிர்ச்சியையும் பீதியையும் உண்டு பண்ணக்கூடிய இச் செய்தி மனித குலத்திற்கே ஆபத்தானதாகும். திடீரென புதுப்புது நோய்கள் பரவும்; நீர் நிலைகள் நஞ்சாகிப்போகும்; மீன்கள் செத்து மிதக்கும்; பயிர்கள் திடீரென கருகிப்போகும் ......! இப்பாதிப்புக்கள், பேரழிவுகள் எங்கே? எப்போது... ? நிகழும் என யாராலும் கண்டறிய முடியாது.

நச்சுக் சழிவுகளைச் சுத்திகரித்து செயலிழக்கச் செய்வதை விட, அவற்றை இரகசியமாகக் கடலில் கொட்டுவது அல்லது மூன்றாம் உலக ஏழைநாட்டொன்றில் புதைத்துவிடுவது, மிகவும் சிக்கனமானதும் பாதுகாப்பானதும் ஆதம் இதனாலேயே வல்லரசுகள் நச்சுக் கழிவு ஏற்றுமதியை விரும்புகின்றன.

ஒரு தொன் நச்சுக் கழிவுப் பொருள்களை செயலிழக்கச் செய்வதற்கு குறைந்தது பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவேண்டும். இதைவிட நச்சுக் கழிவுகளை கப்பலிலே ஏற்றி, நடுக்கடலில் கப்பலுடன் மூழ்கடிக்கச் செய்துவிடுவதுசெலவு குறைவானதாகும்.

போதைப் பொருள் வியாபாரம், சட்டவிரோத ஆயுத வியாபாரம் ஆகியவற்றைவிட இதொழில் தான் இன்று முன்னணியில் திகழ்கிறது.

அமெரிக்காவின் பிலடெல்பியாவிலிருந்து நச்சுக் கழிவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட கபபலொன்று ஆண்டுக் கணக்கில் கடலிலேயே நாடோடியாக அலைநது திரிந்தது. இறுதியில் இலங்கையிலிருநதும அக் கப்பல் விரட்டபபட்டது; பின் அந்தக் கப்பலையே காண முடியவில்லை; வழமை போலவே இக்கப்பல் இந்துமா கடலில் மூழ்கடிக்கபபட்டது.......?! அண்மையில் அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட பல நச்சுக் கழிவுக் கபபலகள் நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான பசுமை, அமைதி இயக்கம் கருத்துத தெரிவிக்கையில்:

''இந்துமா கடல் பிராந்தியத்தில தான் நச்சுக் கழிவுக் கபபலகள அடிக்கடி திரிகின்றன. நச்சுக் கழிவுகளைக் கொட்டுவதற்கெனவே சில ஏழை நாடுகளின் சிறிய தீவுகளைக் கூட இரகசியமக வாங்கியுள்ளன சில வல்லரசு நாடுகள்''

என அறுதியிட்டுக் கூறியுள்ளது, பசுமை அமைதி இயக்கம்.

மனித குலத்துக்கே ஆபத்தான நச்சு இரசாயனக் கழிவுகளால் உலகிற்கு ஏற்படும் பேரபாயத்திலிருந்து. உயிரினங்களைக் காப்பாற்ற நீதியான யுத்தமொன்றைத் தொடுக்க வேண்டியது அவசியமானதாகும்,

## உயிரியல் ஆயுதங்கள்...

அபாயகரமானபாக்டீரியாக்கள், வைரஸ் கிருமிகளை வைத்து உயிரியல் ஆயுதங்களை (Biological Weapon) தயாரிப்பதற்கான சோதனைகளைஅமெரிக்கா மும்முரமாக நடாத்தி வருகிறது. அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் தலைமை ஆய்வகம் ''ஃபோர்ட் டெட்ரிக்'' இத்தகைய ஆராய்ச்சிகளை பல்வேறுபட்ட இடங்களில் நடத்திவருவதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மிக இரகசியமான சூழ்நிலையில் உயிரியல் ஆயுதப்போர் முறைகளை உருவாக்கும் பணி. பூமிக்கடியிலுள்ள சோதனைச் சாலைகளில் நடைபெறுகின்றது.

டொல்பியாவிலுள்ள தாமஸ் ஜெஃபர்சன் பல்கலைக் கழகத்தில் நச்சுப் பொருள் பாக்டீரியாக்கள், தாவர விலங்குகளின் நச்சுப்பொருள்கள் பற்றிய ஆய்வு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பயங்கர காய்ச்சலை உண்டு பண்ணக்கூடிய கொடிய வைரஸ் கிருமியை உற்பத்தி செய்வதற்காக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் 17 லட்சம் டொலர்களை ஒதுக்கியுள்ளது. மேலும் 54லட்சம் டொலர் செலவில் மிகக் கொடிய வைரஸ்கள், பாக்டீரியாக்களை வைத்து சோதனை செய்வதற்கான அதிவிசேட ஆய்வுகூடமொன்றைஅமைக்க உத்தேசித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞான ஆய்வுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. புதிய உயிரியல் ஆயுதங்களை உருவாக்க அமெரிக்கா பல கொடிய திட்டங்களை வகுப்பதற்கு எதிராகவும், அமெரிக்காவின் போலி முகத்திரையைக் கிழித்து, உலகை அழிவிலிருந்து காக்க உலக மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

வியட்நாமியக் கிராமங்களில் நீர் நிலைகளில் உயிரியல் குடுவைகளை அமெரிக்க கூலிப்படைகள் வீசிவிட்டுச் சென்றதன் காரணமாக, அந் நீர் நிலையில் நீரருந்திய/பயன்படுத்தியவர்கள் உடல் உளரீதியிலான பலத்த தாக்கங்களுக்கு உட்படுவதை நாம்மறந்துவிடவில்லை. பரம்பரை ரீதியான தாக்கங்களை உண்டு பண்ணிய அமெரிக்காவின் கொடுஞ்செயல் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

★ இவ்வாறாக, இன்றைய உலகில் அணு ஆயுதங்கள் நச்சுவாயுக்கள், நச்சுப்பொருள்கள்/கழிவுகள், உயிரியல் ஆயுதங்களின் மூலமாக, உலக மக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கி இருப்பதுடன் மனிதகுலத்திற்கே ஆபத்தானவையாகவும் விளங்குகின்றனஎனலாம்.

எனவே. 'மனித குல அச்சுறுத்தல்களுக்கு எதிராக' மக்கள் ஒன்று திரள வேண்டிய காலம் முன்னே காத்து நிற்கிறது......

# இஸ்ரேல் பிறந்த கதை

இஸ்ரேல் -
அது யூதர்களின் தாயகம்!

தங்கள் தாயகத்தைவிட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, 'அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம்' என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

கடந்த நூற்றாண்டில்குறிப்பாக ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் யூதப் படுகொலைகள் அதிகரித்து இடம் பெற்றன. அதையடுதது தாய் நாடு திரும்பும் உத்வேகம் நாடுகடந்த யூதர்களிடையே ஏற்பட்டது. 2ஆம் உலக மகா யுத்தத்தின்போது ஹிட்லரின் நாஸி ஜேர்மனியில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து மீண்டும் ''தாயகம் நோக்கியபயணம்'' யூதர்களின் தாரக மந்திரம் ஆகியது.

பலஸ்தீனத்துக்குள் நுழைய பிரித்தானியர் தடைவிதிக்கின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் சைப்பிரஸ் தீவில் மீண்டும் தடைமுகாம்களில் அடைக்கப்படுகின்றனர்.

''ஒரு மனிதனின் வாழ்நாளில் தான் வாழ்வதற்காகத் தன் மனம் வெறுக்கும்எவ்வளவோ காரியங்களைச் செய்கிறான். அவமானம், சித்திரவதை மரணத்திற்குக்கூடப் பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்தச் சிறிய தொகை மனிதர்கள்...''

ஆயிரம்இடர் வந்தபோதும் ''தாயகம் நோக்கிய பயணத்தை''த் தொடர்கின்றார்கள்.

தேனும் பாலும் வழிந்தோடும் தேசம் என்ற கற்பனையோடு தாயக மண்ணிற்குத் திரும்பும் அம்மக்களுக்குத் தெரிவதெல்லாம் வெறுமையான பாலைவனங்களும் அணுக முடியாத சதுப்பு நிலங்களுமே.

இழப்பதற்கு எதுவுமில்லை. இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறு கையில் மண்வெட்டி! ஊணின்றி, உறக்கமின்றி வியர்வையையும் இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை மீட்டெடுக்கின்றார்கள்.

★ ★

ஆனால் இன்றைய இஸ்ரேல் ஓர் ஆக்கிரமிப்பின் சின்னமாக மாறியிருப்பது ஏற்புடைய தொன்றல்ல.

சிறுகதை

# யாமிருக்க பயமேன்......?

## விஜயா

இப்போது சிலகாலமாக இப்படித்தான்......

பின்னிரவில், கடும்பனிக் குளிரில், போர்வையைஇழுத்து மூடிச் சுருண்டு படுத்து, சுகமாகத் தூங்கிற தூக்கம் இப்போசிலகாலமாக என்னை விட்டுப் போய் விட்டது.

கட்டிலருகே இருக்கும் மேசையைக் கைகள் துளாவி கைக்கடிகாரத்தை எடுக்கின்றன. ரேடிய எண்கள் காலை மூன்று நாற்பது என ஒளிர்கின்றன. ஜன்னல்களை இறுக்ச் சாத்தி விட்டாலும் கூட உள்ளே கசிகின்ற நிலவின் ஒளியில் மகனும் மனைவியும் தெரிகின்றார்கள்.

தாயை அணைத்துத் துயில்கிற என்மகன் கோட்ட மட்டத்தில், புலமைப் பரிசில் பரீட்சையில், முதலாவதாகச் சித்திஎய்திய புலிக்குட்டி...

'அப்பா, நாளைக்கு நீங்க என்னைக் கட்டாயம் கூட்டிப் போக வேணும்...' -துயிலச் செல்லும் வரை அவன் அரித்துக் கொண்டேயிருந்ததை இன்றைக்கு நிறைவேற்றி வைக்க வேண்டும்.

எனக்கும் அவனைக் கூட்டிப் போக ஆசைதான். ஆனால் நாளை என்பது எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை செய்ய முடியாத ஒருமண்ணில் வாழ்ந்து கொண்டு அவனது கோரிக்கைக்கு உறுதியான ஒரு பதிலை என்னால் சொல்ல முடியவில்லை.

'பார்க்கலாம்......'

'பார்க்கலாம் பறக்கலாம் இல்லையப்பா... கட்டாயம் போகவேணும். புலமைப் பரிசிலில் கூடப் புள்ளிகள் எடுத்ததற்கு எனக்கு சிறப்புப் பரிசாம். எல்லாப் பிள்ளையளும் கட்டாயம் வருவினம். நானும் கட்டாயம் போக வேணும்.

அருகே என்றால் அவன் தனியே போய் விடுவான். பரிசளிப்பு நடப்பதோ எட்டு மைல்களுக்கப்பால். அவனுக்கு கட்டாயம் துணை தேவை.

'பள்ளிக் கூடத்திலிருந்து நீங்கள் எல்லாமாக பத்துப் பேர் போறியள். ஏன் எல்லோரையும் சேர்த்து ஓர் ஆசிரியர் கூட்டிப் போகக் கூடாது....?

'அப்பா...' அவன் சீற்றத்தோடு சிணுங்கி நிலத்தை உதைந்தான். தப்பாமல் வந்திருக்கும் என்னுடையகுணம். இப்ப எந்த ரீச்சர் அப்பா பிள்ளையளை பொறுப்பெடுப்பினம்? வான், பஸ் தன்னும் இருக்கோ...? தங்க தங்க பெற்றோரோடை தான் போகச் சொல்லிப் போட்டினம்.

எனக்குஅவனுடைய சீற்றத்தை இரசிக்க, வாயைக் கிளற ஆசை. 'ஏன் உங்கடை வாத்திமாருக்கு அப்படியென்ன பஞ்சி. கூட்டிப் போனால் என்னவாம்...?'

அவன் மூக்கைச் சுளிக்கிறான். இது தாயினுடைய பழக்கம். 'உங்களுக்கு ஒண்டும் விளங்குதில்லை அப்பா... பொம்பர் வந்தா ரீச்சர் என்ன செய்யுற? பத்துப்பிள்ளையளையும் பாக்கிறதோ தன்னைப் பாக்கிறதோ......? காலம் தெரியாமல் கதைக்கிறியள். அப்பா அம்மா தான் கூட்டிப்போகவேணும் அப்பதான் பிரச்சினையில்லை.

காலம் தெரியாமல் கதைக்கிறியள்...

விஷய ஞானம் இன்றைய சிறுசுகளுக்கு அதிகம் தான். நான் எஸ்எஸ்ஸியில் படித்த விஞ்ஞானத்தை ஐந்தாம் ஆறாம்வகுப்பிலேயே படிக்கிற மேதாவிகள். மின்னோட்டத்தைப் பற்றி பெரிய வகுப்பிலேயே நான் புரியக் கஷ்டப்பட்டதை இந்த சின்ன வயதிலேயே தெளிவாகப் புரிந்திருக்கிறவர்கள்... என்றாலும் எனக்குள் சீண்டும் வேகம் குறையவில்லை.

'பார்க்கலாம்... ...'

அவன் மீண்டும் நிலத்தை உதைக்கிறான். இம்முறை கண்கள் சிவந்து கலங்குகின்றன. மலரினும் மெல்லிய இதயம். விஷயம் விளங்காத அப்பாவோடு போராட வேண்டியிருக்கிறதே என்ற வெட்கமும் துக்கமும்...

'கூட்டிக் கொண்டு போறன் எண்டு சொல்லுங்கோவன்...' இவ்வளவு நேரமும் வேடிக்கை பார்த்த என்னவள், அவனுடைய அம்மா கோதாவில் இறங்குகிறாள். 'அப்பாபார்க்கலாம் என்றுஎதற்கன் சொன்னால் கட்டாயம் செய்வாரி எண்டு தெரியும் தானே. ஏன் கண்ணைக் கசக்கிறாய்? நீங்களென்ன அப்பாவும் பிள்ளையுமோ அல்லது சகோதரங்களோ எந்த நேரமும் கொழுவிக் கொண்டு நிக்கிறியள்...?

நான் சிரிக்கிறேன்.

என் சிரிப்பு அவனுக்கு நம்பிக்கை தர தாயை அணைத்துக் கொண்டு படுத்துவிட்டான்.

இன்று அவனைப் பரிசளிப்பு விழாவிற்கு கூட்டிப்போக வேண்டும். நேரம் காலை நான்கு மணியாகிறது. பத்து முப்பது மணிக்கு பரிசளிப்பு விழா. சுருட்டையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வருகிறேன். வெளி வாசலில் அமர்ந்து பனிக்குளிரின் ஊடே புகையிலைச் சூட்டை அனுபவிப்பதும் எனக்கு புதிதாக வந்த பழக்கம் தான். புதுப்பழக்கம் என்றாலும் இப்போ தவிர்க்க முடியாத பழக்கமாகி சங்கடப் படுத்துகிறது.

சுருட்டு இதமாகத்தான் இருக்கிறது. பனிப் புகாரின் இறுக்கத்தில் இதன் புகை விரவிக் கரைவதிலும் ஓர் அழகுக் கோலம் தெரிகிறது. தூரத்தே கடற் பரப்பில் கடற்படைக் கப்பலோ பீரங்கிப்படகோ நகர்கிற ஒலி... கொஞ்சநாட்களாக இல்லாதிருந்து மீண்டும் இரண்டு நாட்களாக கேட்கிற சப்தம். ஏன் மீண்டும்என யோசிக்கிறபோதே வடகீழ் வானில் வண்டின் இரைச்சல்.

இன்றைய நாள் வித்தியாசமாய்த்தான் விடியும் போல் தெரிகிறது. பரிசளிப்பு விழாவிற்கு போக முடியுமா......? கட்டாயம் போக வேண்டும். போகாதுவிட்டால்இவனோடு 'அண்டலிக்க' முடியாது.

வடகீழ் திசையில் கேட்ட வண்டின் இரைச்சல் கர்ணகடூரமாகி அதிகாலையின் அமைதியைக் கிழித்துக்ஹெலியின் வடிவாய் தென் மேற்காய் செல்கிறது. நேரம்நான்கு நாற்பத்தைந்து. வழக்கமாக ஹெலி பறவாத நேரம். ஏதோ விசேஷம்இருக்கிறது. இரவோடிரவாக எதிரிப் படை உள் நுழைந்துபற்றைகளிலும்வயல் வெளிகளிலும் படுத்துக்கிடக்கிறதோ? எதையும் தீர்க்கமாய்உணரமுடியாத அவலம்.. சுருட்டு மட்டும் தனிமைக்கு துணைதந்து உற்ற நண்பனாய் உறவாடுகிறது.

மனைவியை எழுப்பலாமா...? வேண்டாம்... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டும். தெற்கேயும் மேற்கேயும் தீவுகள் முழுவதும் இராணுவம் ஒரு திசையில் தீவைத் தொடுக்கிற பாலம். மறுதிசையில் தீவைப் பிரிக்கிற பரவைக் கடல். இராணுவம் ஏதோவொரு வழியால் இந்த மண்ணுக்குள்ளும்வரப்பார்க்கிறது. என இரண்டு வருடங்களாக கதைத்து அலுத்த நிலை. இடையிலே எறிகிற கணைகள் அச்சுறுத்தினாலும் இன்னமும் நாம் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டு...

ஐந்து மணி. ஹெலி கரையோரமாக வட்டமிடுகிறது. எதிரும் புதிருமாய் சூட்டுச் சத்தங்கள்ஆரம்பமாகி தொடர்கின்றன. நான்கைந்து மைல்களுக்கப்பால்நடக்கிறசண்டை சூடடுச்சத்தங்கள் எம்மை வெருட்டுவதில்லை. பொம்பர்கள்கூடசனத்திற்கு பழகி விட்டது. எல்லோரும் பயப்படுவது எப்போஎங்குவருமென்று தெரியாமல் வந்து விழுந்து வெடித்துச் சிதறும் எறிகணைகளுக்குத்தான். ஹெலி வானில் இருக்கையில் எறிகணைகள் வருவதில்லை. என எனக்குள் ஒரு நம்பிக்கை.

இந்த வெடிச்சத்தங்கள் அப்படியே அடங்கிப் போகலாம். ஒருவேளை ஹெலியும் தன் வேட்டுக்களை தீர்த்து விட்டுப் போகலாம். இவையெல்லாம் தூரத்தில் தான் நடக்கின்றன. இவர்களை எழுப்ப வேண்டாம். இன்று ஞாயிற்றுக்கிழமை தானே, கொஞ்சம் ஆறுதலாய் தூங்கட்டும்.

'என்னப்பா...என்னசத்தம்' ஹெலி சுடுதோ...?ஓ, மனைவியும துயில்கலைந்து எழுந்து விட்டாள். எனக்கருகே கேள்விகளை வீசி வருகிறாள், 'பிள்ளையையும் எழுப்புவமே...?

'வேண்டாம்... உது எங்கயோ மாதகல் பக்கம்...' சொல்லி முடிவுக்கு முன் சோவென்ற இரைச்சலுடன்மழை வரும் சப்தம் கேட்கிறது. வானத்தில் மழைக்கான தடம் இல்லை. அப்போ என்ன சப்தம் இது. முற்றத்துக்கு வந்து வானத்தைப் பார்க்கிறேன். ஐந்தரை மணிக்கடிக்கும் தேவாலய மணி கேட்கிறது. விரைகிற இரைச்சல் வெகு பிரயத்தனத்தில் விமானங்கள் தெரிகின்றன.

வீட்டினுள் ஓடி மகனை எழுப்பிக் கொண்டு பங்கருக்கு விரைகிறேன். பனங்கொட்டெல்லாம் எப்பேதோ உக்கிவிட்டதால்திறந்துவிடப்பட்ட குழி. மேலே மறைவாய் மூடிச் சடைத்து நிற்கும் புளியமரம்.

மனைவியையும் மகனையும் வற்புறுத்தி பங்கரில் இருத்திவிட்டு நான் விமானத்தைத் தேடுகிறேன்,

அதோ...அதோ...
இது வேறு விமானங்கள்.

வேறு சப்தம்... வழக்கமான சீமாசெட்டியோ அவ்ரோவோ அல்ல. புதிதாக வந்த புக்காராவோ...சுப்பசொனிக்கோ... எதுவோ...

விமானம் பெரிய வட்டமெடுத்து எங்கள் வீட்டுக்கு மேலால் சீறிச் செல்கிறது.

நான் விழுந்து படுக்கிறேன். அப்போதுதான் அவன் பதுங்கு குழியைவிட்டு வெளிவந்து என்னருகே நிற்பதை அறிகிறேன். அவனும் என்னோடு வித்தியாசமாய் குப்புறப் படுக்கிறான். 'உப்பிடிப்படுக்கக்கூடா தப்பா நெஞ்சு நிலத்தில முட்டாம முழங்கையூண்டி காதைப் பொத்தி படுக்க வேணும்' அந்தப் பதற்றத்திலும் அவன் எனக்கு பாடம் சொல்லித்தருகிறான்.

இவன் பதுங்குகுழியை விட்டு வெளியே வந்து விட்டானே என்ற கோபம் எனக்குள் பீறிடுகிறது. 'முதலில் நீ பங்கருக்குள்ள போ...' முதுகில் லேசாய் அறைகிறேன். 'நீயும் வா அப்பா...' எனக் கத்திக்கொண்டே அவன் சுண்டெலியின் லாவகத்தோடு பங்கருக்குள் ஓடுகிறான்.

அன்டைஅயல் பெண்களால் பதுங்குகுழி நிறைகிறது. பதினைந்து நிமிடநேரம் சுற்றி ஆறு குண்டுகளை வீசிவிட்டு விமானங்கள் போய் விட்டன.

'கிட்டடியில் விழேல்ல...எல்லாம் தூரத்திலதான்' யாரோ ஒரு பெண் சொல்கிறாள்.

'கிட்டவோ தூரவோ... யாரோ எவரோ......சனங்கள் என்னென்ன கஷ்டப்படினமோ...கடவுளே...அம்மாளே.. ஆச்சித்தாயே நீதான் எங்களுக்குத்துணை...' இன்னொரு பெண் கரங்குவிக்கிறாள்.

பொம்பர்களும் ஹெலியும் போனகையோடு சூடடுச் சத்தங்களும் அடங்கிவிடுகின்றன. எறிகணை வீச்சுகள் விட்டு விட்டுக் கேட்க காலை எட்டு மணியாகிறது. இந்தப் பதற்றங்களில் நானும் அவனும் இன்னமும் முகங்கூடக் கழுவவில்லை. மனைவி ஒருவாறு தேநீர் தயாரித்து விட்டார்.

'அப்போய்......கட்டாயம் பத்து மணிக்கு போகோணும் என்ன..' மகன் மறுபடியும் தொடங்கி விட்டான்.

விடிந்தும் விடியாத பொழுதில் ஹெலியும் பொம்பர்களுமாக ஏற்படுத்திவிட்ட பதற்றத்தின் களைஇப்போதுதான் எனக்குத் தெரிகின்றது பயமில்லாதவனாக வெளியே காட்டிக் கொண்டாலும் மனதுள் எதற்காக வெல்லாமோ யோசித்ததின் தாக்கம் உடலை அசத்துகிறது. இவனுக்கு இந்தத் தாக்கங்கள் எதுவும் இல்லையா...? 'இளங்கன்று பயமறியாது' என்பதன் அர்த்தமோ இவன்?

அவனும் நானுமாய் முகம் கழுவுகிறோம். பாணுக்கு நேரம் போய்விட்டது என்ற மனைவியின் புறுபுறுப்பில் தேநீரையும் குடிக்காமல் சந்திக் கடைக்கு விரைகிறேன்.

எக்கச்சக்கமான சனம். நாற்பது ரூபாய்க்கு அரிசி வாங்க வழியில்லாதவர்களும், வழியிருநதும் மனமில்லாதவர்களுமாய் கடையடியில் பாணுக்காக சனம் இடிபடுகிறது. சனத்தூடே நுழைந்து பாணை வாங்கிவிடுகிறேன். காலையில் எனக்கு இதொரு வெற்றி. பாண் முடியுமுன் வாங்கிய வெற்றி.

'இன்றைக்கு ஊரடங்காம்...?' கேள்வியைப் போலவும் பதிலைப் போலவும் சந்தியில் சுப்பரம்மான் இழுக்கிறார்.

ஹெலியும் பொம்பரும் வந்தால் உடன ஊரடங்கே..? என்ன விசர்கதை கதைக்கிறீர்..?' விதானையார் ஏனோ வெருண்டெழுகிறார்.

'கேவியூ போட்டாப் போல என்ன...? ஊரில எல்லாம் வழக்கம் போலதான் நடக்குது.. கல்யாணமும் நடக்குது, செத்த வீடும் நடக்குது. கந்தோருகளும் நடக்குது பள்ளிக்கூடமும் நடக்குது... யாரோ உதைப் பெரிதுபடுத்துகினமே...?' பென்சனியர் ராசா பேசுகிறார். நடப்பதைப் பற்றி பெருமைப்படுகிறார பொறாமைப் படுகிறரா அல்லது கோபப் படுகிறாரா எனப்புரிய முடியாத சாகசக்குரல்.

'கேவியூதானாம். இப்ப உவங்கடை ரேடியோவில சொன்னவங்கள்' ரேடியோக்கடை மூர்த்தி அறிவிக்கிறார்.

நான் யாரோடும் பேசவில்லை. ஆறு மணிக்கு குண்டு போட்டுவிட்டு எட்டு மணிக்கு ஊரங்கு பற்றி அறிவிக்கிறார்களே என மனதுள் சினக்கிறேன். ஊரடங்கு போட்டா என்ன போடாட்டி என்ன? அவங்கள் நினைச்ச நேரம் நினைச்ச இடத்தில குண்டு போடுறாங்கள்தானே...

'என்னவாம் கடையடியில் புதினம்...?' மனைவியின் கேள்வி.

'கேவியூவாம்...'

'அப்ப இவனை என்னண்டு கூட்டிப் போகப் போறியள். பயமில்லையே... கேவியூக்கை ஹெலிஎங்கயும்சுடும் எப்பவும் சுடும்...'

'அதுதான் யோசிக்கிறன்.'

பாணைக் கடித்துக் கொண்டே மகன் என்னைஒரு பார்வை பார்க்கிறான். கொஞ்சம் ஏளனமான பார்வை.

அப்பா கேவியூக்கை ஒபீஸ் போறனீங்களெல்லோ...

அம்மாகேவியூக்கை என்னை பள்ளிக்கு திரத்திறனீங்களெல்லோ......

யாவாரிமாரும் சனமும் றோட்டு நிறைய சைக்கிளில ஊர்வலம் போல போறவையெல்லோ. ..

அவன் அடுக்கிக் கொண்டே போக நான் இடைமறிக்கிறேன். ''தம்பி, எனக்கு உன்னை கூட்டிப்போகத்தான் பயம். நீ சின்னப்பிள்ளை .. பிரச்சினை யென்றால் எனக்கு தப்பத்தெரியும். உன்னையும் கூட்டிக் கொண்டுதப்புறதெண்டால்...எட நீ சின்னப் பெடியன். உன்ரை பரிசை நீ போய் வாங்காவிட்டால், பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி வைப்பினம் தானே...ஏன் அந்தரப்படுகிறாய்...?

நான் அந்தரப்படேல்லையப்பா. நீங்கள் தான் பயப்படுறியள். உங்களை விட வடிவாய் எனக்கு தப்பத் தெரியும் உங்களுக்கு விழுந்து படுக்கக் கூட தெரியேல்லை. நான் வடிவாய் கவர் எடுப்பன். ஹெலி வந்தால் எனக்கு ஒரு பனை போதும். அது எல்லா இடமும் நிக்குது தானே...'

இவனோடு சமாளிக்க முடியாது. இந்தக் காலப்பிள்ளை நினைத்ததை நிறைவேற்றியே தீரும்.

''அப்பா, மணி ஒன்பதாகுது வெளிக்கிடுங்களன்' அவன் ஆணையிடுமாப் போல் சொல்கிறான். இனி மீற முடியாது.

மனதில் திருப்தியில்லை. ஹெலி வருமோ ...நிலத்தில் இல்லாத கட்டுப் பாட்டை வானில் இருந்து நிலைநாட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக உள்வாரி மாணவர் --- சிலரின் பயங்கர கனவுகள் ---

கடந்தவாரம், வெள்ளிமஞ்சரியில் யோ. ஜெய காந்தன் (அரசியற் சிறப்பு) எழுதிய "பட்டங்களை மலிவாக்கும் வெளிவாரிப் பட்டப்படிப்பு" தலைப் பில் வெளிவந்த கட்டுரையை விமர்சித்து வெளி வாரி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களி டம் இருந்து பல கட்டுரைகள் எமக்கு கிடைத்தன. அவற்றில் ஒன்று இது.

யாழ். பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவு ஆரம்பிக்கப் பட்ட பின்னர் அங்கு உள்வாரி யாகக் கல்விகற்கும் சில மாண வர்கள் பயங்கரக் கனவுகளைக் கண்டு அச்சமடைய ஆரம்பித் துள்ளனர். இதன் வெளிப்பாடு சிலமாதங்களுக்கு முன்னர் பல் கலைக்கழகச் சுவர்களில் காணப்பட்டது. பின்னர் கட ந்தவார ஈழநாதம் வெள்ளி மஞ்சரியில் தனது அச்சத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் ஓர் அரசியற் சிறப்பு மாணவன். ஆனால் அவர் தனது உண்மை யான அச்சத்தை வெளியிடத் தயங்கி சுற்றிவளைத்துச் சில சங்கதிகளைச் சொல்லியிருக்கி றார்.

கட்டுரையின் ஆரம்பத்தில் திறமைக்குததான் விரோதி யலல என்பதை திட்டவட்ட மாக தெரிவித்திருக்கும் அவர் திறமையுள்ளவர்களின் உயர் கல்விக்கு தடையான கருத்துக் களை முன் வைத்திருபபது ஏனோ?

இந்தக் கட்டுரையில் காணப் படும ஒருவேடிக்கையான வி-யம அவர் தனக்கு ஏற்படும் பொருளாதார இறுககத்திற் குக் காரணமாக 'அடிககடி வரும் பல்கலைக்கழக கொண் டாட்டங்களுக்கு பணப கொடு த்தல்'' என்பதைக் குறிபபிட் டுளளதாகும். இநதக் கொண் டாட்டங்கள் எலலாம் வெளி வாரி பட்டப்படிப்பு ஆரம்பிக் கபபட்டதால்தான் நடாத்த வேண்டி ஏற்படுகிறது என இவர் கருதுகிறாரா?

பொருளாதார இறுக்கம் இன்று சகலருக்கும பொதுவா னது. அத்துடன் இலவசகல்வி, பலவேறு உதவிப பணங்களு டன்கல்விகற்கும்இவர்களுக்கா அல்லது சகலதிற்கும் பணம் செலுத்தும் வெளிவாரி மாண வர்களுக்கா பொருளாதார இறுக்கம் அதிகம்?

வெளிவாரியாக பட்டங் களை வழங்குவதன் மூலம் ஒரு திறமையற்ற எமது பிரதேசத் திறகுப் பிரயோசனமற்ற ஒரு பட்டதாரிக்கூட்டம் ஏறபட்டு விடும் என அச்சம் அடையும் இவர்-அதனால் வெளிவாரிக் கற்கை நெறியை பல்கலைக் கழகம் கைவிட வேண்டும் என கருதும் இவர்- அவரது வார்த் தைகளில் ''எமது பகுதிக்கேற்ற விதத்தில் எதிர்பார்க்கும் அள வில் அறிவியற் செயற்பாட் டைக் கொண்டிராத உள்வாரி மாணவர்களை'' உற்பத்தி செய்யும் பல்கலைக் கழகத் தையே மூடிவிடும்படி ஆலோ சனை கூறுவாரா? நிச்சயமாக இல்லை. ஏனென்றால் பல்க லைக்கழகம் இலலாவிட்டால் அடைப்புக்குறிக்குள் போட ''அரசியல் சிறபபு'' அவருக் குக் கிடைக்காதே.

''ஒரு தளர்வு நிலையில் பட் டங்கள் அநேகமான வெளி வாரி மாணவர்களுக்குக் கிடை த்தால் அது அவர்களைக் கொழும்பு நோக்கி நகர்த்துவ தற்கு இடமளிக்கும்'' எனபது அவரது மற்றொரு வாதம்.

ஏதோ உள்வாரி மாணவர் கள் அனைவரும் படடம் பெற்றதும் இங்கேயே சேவை செய்ய சத்தியப் பிரமணம் செய்தவர்கள்போலவும் வெளி வாரி மாணவர்கள் அனை வரும் பட்டம் பெற்றதும் கொழும்புக்குப் பறக்கப் பெட்டிகட்டி வைத்துக் கொணடு ஆயத்த நிலையில் இருப்பவர்கள் போலவும் காட் டுகிறது இவரது வாதம்.

வெளிவாரிப் பட்டங்களின் தரபபற்றியதே இவரது மிகப் பெரிய கவலையாகும. எங்கே யாழ. பல்கலைக்கழகம் திற மையற்ற ஒரு கூட்டத்திற்குப் பட்டம வழங்கி பட்டங்களை மலினப்படுத்தி விடுமோ? என் பதுதான் தனது மிகப் பெரிய கவலை எனக காட்ட படாத பாடு பட்டிருக்கிறார். இந்தக் கவலையை அவர் கட்டுரையின் பெரும் பகுதியில் காட்டியிருக் கிறார். பரீட்சைக்கு மட்டும படிககுசித்தியடையும்கூட்டத் தை வளர்க்காதீர்கள் சிந்தனை யோட்டத்தைக் குறுகிய வட் டததுள் கொணட திற னாய்வு, விமர்சனம், பரிசீல னை என்பன எதுவுமற்ற பாடமாக்கிப் பரீட்சைஎழுதும் கூட்டத்தை உருவாக்காதீர் கள்... இப்படி பல எச்சரிக் கைகளை விடுத்துள்ளார்.

உண்மையாகவே அவர் அவ் வாறு கவலைப்படுவாரானால் அது நியாயமானதே. அதனை அனுமதிக்கவும் கூடாதுதான். ஆனால் வெளிவாரி பட்டம் குறித்து அவரது குற்றச் சாட் டுகள் சரியானவைதானா?

பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கத் தகுதியிருந்தும் பல் வேறு காரணங்களால் வாய் ப்பு மறுக்கப்பட்டவர்கள்தான் இந்த வெளிவாரி மாணவர் எனபது வெளிப்படை. அவர் கள் தொழில் செய்யும் போது கல்வி கற்பதனால் ஓரிரு பாட ங்களையாவது தமது தொழி லுடன் சார்ந்ததாகத்தான் தெரிவு செய்வார்கள். உள் வாரி மாணவர்கள் பகுதி நேர மாகப்பெறும் விடுமுறைகால பயிற்சிகள் என்பனதான் வெளி வாரி மாணவரின் தொழில். நடைமுறைச் செயற்பாட்டின் அனுபவத்துடன் கற்கும்கலவி தான்பயனுள்ளதாக அமையும் என்பதனாலேயே இவ்வாறான பயிற்சிகள் சில நிறுவனங்கள் மூலம உள்வாரி மாணவருக்கு வழங்கப்படுகின்றன. எனவே தொழில் அனுபவததுடன் கற் பவர்களா? அலலது பயிற்சியு டன் கற்பவர்களா குறிதத பாடத்தில் திறமையுடையவ ராக இருக்க முடியும்? எவரு டைய விடையில திறனாய்வு இருக்கும்? அத்துடன் உள் வாரிப பட்டம பெற்ற மாண வர்களில் அநேகர் தொழில் வாய்பபில் அலையுண்டு படித் தது ஏதோ, கிடைத்ததுஏதோ என்று ஏதாவது ஒரு வேலை யில தொற்றிக்கொள்ள வேண் டிய நிலைதான் இன்று காண ப்படுகிறது.

விரிவுரைகள், பாடக்குறிப்பு கள் இவர்கள் படித்த பகுதி எது? என்பதை நன்கு தெரிநது கொண்டவர்களால் தயாரிக் கப்படும் வினாத்தாள்கள் என் பவற்றுடன் பட்டம் பெறும் உள்வாரி மாணவர்களா அல் லது பாடத்திட்டத்தைமட்டும் வைத்துக்கொண்டு பரீட்சை யில் சித்திபெறும் மாணவர் களா கூடுதலான தேடுதலில் ஈடுபடவேண்டும்? எவர் பாட மாக்கி பரீட்சை எழுதும் வாய் ப்பை அதிகமுடையவர்? எனவே வெளிவாரி மாணவர் ஒருவர் கடும்பிரயத்தனத்தின் மத்தியில் பெறும் பட்டத்தை தரமற்றதென அல்லது பாட மாக்கி பெற்றதென எப்படி இவர் கூறுவார்?

அவரவர் திறமைக்கேற்ற-விருப்பத்திற்கேற்ற கல்வி கற் றல் ஓர் அடிப்படை உரிமை. இவ் உரிமையை மறுப்பது ஒரு வகைத் தரபபடுத்தலே. வெளி வாரி மாணவர்களை அவர் குறிப்பிட்டது போல ''திறமை'' உடையவர்களாக மாற்றுவதற்கு முயற்சிப்பதை விடுத்து அவர்களை வெளியே தள்ளி விடுவது எவ்விதத்தில் பொருந்தும். அனைவருமகல்வி கற்பதற்குவசதி செய்துகொடு

**சிவபாலன்**

த்தல் சமுதாயத்தின் கடமை இன்று எமது பிரதேசத்தில் உயர் கல்வி வாய்ப்பை ஏற்ப டுத்தித் தரக்கூடிய நிறுவன மாக விளங்கும் யாழ். பல்க லைக்கழகம் தனதுகடமையை நிறைவேற்றுகிறது. அங்கு பட்டம் பெறுபவர்களின் தர த்தை நிர்ணயிக்க வேண்டி யதுஅவர்களுடைய பொறுப்பு அவர்கள் வழங்கும் பட்டங் கள் குறித்து சந்தேகப்பட ஏதுமில்லை.

இன்று தென்பகுதியில்இயங் கும் திறந்த வெளிப்பல்கலைக் கழகம் அடிப்படைக் கல்வித்த கைமை எதனையும் எதிர்பா ராது படிப்படியான கற்பித் தல் மூலம் பட்டப்படிப்புவரை தொடரக்கூடிய கற்கை நெறி களைஅறிமுகம் செய்துள்ளது. பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது பிரதேசத் தின்கல்வித்தரம் அதிகரிக்குமே அன்றி குறையாது. வெளிவா ரிக்கற்கை நெறி புதிய விடய மல்ல சிலர் அஞ்சுவது போல பயங்கரமான விடயமும்அல்ல

ஆனால் கட்டுரையாளரின் அச்சம் இன்று பட்டதாரிகளு க்கு சமுகத்திலிருப்பதாக கருதப்படும் தனிப்பெரும் அந் தஸ்து எங்கே பறிபோய் விடுமோ? என்பது போல தோன்றுகிறது.


**தமிழீழத்தின் தாய்** **தியாகதீபம்**

## அன்னை பூபதி
## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உண்ணாவிரதம்: 19 - 03 - 1988

ஈகைச்சாவு: 19 - 04 - 1988

வெறிபிடித்த இந்தியப்படையே நீவந்த வேலை
என்ன?
சண்டித்தனம் செய்யவா? சமர்க்களம் ஆடவா?
வேண்டாம் உன் ஆதிக்க போர்வெறி
போரை நிறுத்து புலிகளுடன் பேசு என்றாய்
கேட்டார்களா பாவிகள்!

வஞ்சகர் சதியினை தீயினால் பொசுக்கிட
வயிற்றினில் வளர்த்திட்டாள் அக்கினித்தீயை
அக்கினி பிழம்புகள் ஆதிக்க படைகளை அழித்தன
அன்னை பூபதி என்றொரு காவியம் பிறந்தது
பாரினில் தமிழன்னை உள்ளம் குளிர்ந்தது.

அன்னை பூபதி ஆகுதி ஆனது கேட்டு
இந்து மாகடல் பொங்கி எழுந்தது
வங்கத்துப் புயல்காற்று சீறிச்சினந்தது
வானதது மேகங்கள் கதறிஅழுதது
வையகம் மீதினில் அன்னையின் தியாகம்
வரலாறு படைத்தது.



புங்குடுதீவு – நயினாதீவு பல நோ. கூ. சங்கம்

(சி-6425)



NEW MASTER INSTITUTE
BMC LANE JAFFNA
★95 A/L★
WEEKEND CLASSES
-PHYSICS-
புதிய பிரிவு
ஆரம்பம்:
18-04-98
(ஞாயிறு)
காலை 9.00 மணி
(சி/6431)

Dindigul Branch Library

# யூனிட் 731

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் நாட்டில், முகாம்களில் இருந்த போர்க் கைதிகளுக்கு ஜெர்மனி இழைத்த வரலாறு காணாத கொடுமைகளை அறியாதவர்களே இல்லையெனலாம். இவ்விஷயத்தில் ஜெர்மன் நாட்டையும் மிஞ்சிவிட்டது ஜபபான் நாடு. நினைத்தாலே நடுங்கவைக்கும் மிகப் பயங்கரமான உண்மைகள் தற்போது தெரியவந்துள்ளன.

1975-ம்ஆண்டு ஹருயோஷி நாகா என்ற ஜப்பானிய திரைப்பட தயாரிப்பாளர் இந்த பாதகச் செயல்களில் ஈடுபட்ட 35 கொலை வெறியர்களின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் ஜப்பான் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பலபிரபல எழுத்தாளர்கள் இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பான் நாட்டில் சிறையிலிருந்த போர்க்கைதிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளியிடுமாறு அமெரிக்க இராணுவத்தின் தலைமைச் செயலகமான பென்டகனிடம் வேண்டுகோள் விடுத்தனர். கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் மற்றும் செய்திகளை தெரிந்துகொள்ளும் சட்டத்தின்கீழ் அமெரிக்க அரசு வெளியிட்டவை ரத்தத்தைஉறைய வைக்கும் மிகமிகப் பயங்கரத் தகவல்கள்:

1937ஆம் ஆண்டு மஞ்சூரியாவில் ஹார்பின் என்ற இடத்திற்கு 40 மைல்கள் தொலைவில் உள்ள பிங்ஃபன் என்ற கிராமத்தில் உயிரின ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்க ஜப்பான் அரசு உத்தரவிட்டது. இந்த விஷயம் மிகமிக ரகசியமாக வைககபபடடது.

இந்த நிறுவனத்தின் பெயர் யூனிட் 731. இங்கு 3000போர் வீரர்கள், விஞ்ஞானிகள், அந்நாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த தாதிமார்கள், மேஜர் ஷீரோ இஷி என்பவர் தலைமையின் கீழ் செயற்படத் துவங்கினர். இந்த நிறுவனம் அமைக்கப்படக் காரணமாக இருந்தவரே கியோடோ பல்கலைக்கழகத்தில் பயின்றஇந்த டாக்டர் ஷீரோ இஷி தான்.

யூனிட் 731 செய்த முதல் காரியம் டைபாயிட், டைபஸ் ஆந்த்ராக்ஸ், கொலரா, பிளேக் சால்மோ நெல்கஸாகாஸ் காங்ரீரன், பெரியம்மை டீபி என்கபலடிஸ் போன்ற மிகப் பயங்கர வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளை ஏராளமான அளவில் உற்பத்தி செய்ததுதான். இப்பயங்கர கிருமிகளை என்ன செய்தார்கள் என்பது மிகக் கொடுமையானது. இங்கு சிறைபிடிக்கப்பட்டிருந்த கொரியா, சீனா, ரஷ்யா, ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் கைதிகளுக்கு இக்கிருமிகள் ஊசிமூலம் ஏற்றப்பட்டு அவைகளால் ஏற்படும் பின் விளைவுகளைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டதாம்.

இங்கு நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் சில:

சிபிலிஸ் எனப்படும் மோசமான பாலியல் நோய் கிருமிகளை ஆரோக்கியமான இளம் பெண் கைதிகளுக்கு செலுத்தி வியாதி முற்றிய சில காலத்திற்குப் பின்னர் இந்த பெண்களோடு ஆண் கைதிகளைத் தொடர்பு கொள்ளச்செய்து நிறை கர்ப்பம் அடைந்த பின் இந்தப் பெண்களைத் துண்டு துண்டாக வெட்டி கர்ப்பப் பையில்இருக்கும் பச்சைக் குழந்தை மற்றும் தாய்பற்றி ஆராய்வது.

கைதிகள் சிலரின் உடலில் உள்ள ரத்தத்தை முழுவதும் வெளியேற்றிவிட்டு அவர்களின் உடலில் குதிரைகளின் ரத்தத்தை ஏற்றுவது.

கைதிகளை வரிசையாகக் கட்டிவைத்த பின்னர் ஆந்த்ராக்ஸ் வாயு குண்டுகளை அவர்களுக்கு அருகில் வெடிப்பது. பின்னர் இறந்த கைதிகளின் உடல் ஆந்த்ராக்ஸ் வாயுவின் விளைவுகளை ஆராய்ந்தறிவது.

40 பாகை பரனைட்டுக்கு குறைவாக உள்ள மிகவும் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகளில் கைதிகளை சாகும் வரை வைத்திருந்த பின்னர் அந்த உடல்களின் மீது கொதிக்கும் நீரைக் கொட்டுவது. மனித உடலில் பனியால் ஏற்படும் விளைவுகளை அறியவே இந்த சோதனைகளை நடத்தினார்கள் என்றுதெரியவந்தது.

கைதிகளை சாகும்வரை எக்ஸ்ரே கருவிகள் முன் நிறுத்துவது.

நோயுற்ற கைதிகளை வாயு நிரம்பிய அறைகளில் அடைத்து நோய்கள் எவ்வாறுஅதிகமாகிறது, உடலை வாயு மேலும் எவ்வாறு பாதிக்கிறது என்பதை அறிவது. மனித உடலில் ஏற்படும் வலியை அவன் எவ்வாறு பொறுத்துக்கொள்கிறான் என்பதை அறிய அதாவது சகிப்புத்தன்மையைஅறிய உடலில் அணு அணுவாகவெட்டிக்கொண்டே செல்வது.

1945ஆம் ஆண்டு ஜப்பான் சரணடைந்தபோது யூனிட் 731இல் வேலை செய்தபெரும்பாலானோர்எதிர்காலவிளைவுகளுக்கு அஞ்சி, மஞ்சூரியாவில் உள்ள ஒரு ரயில் நிலையத்திலேயே சைனட் என்ற மிகக் கொடிய விஷத்தை உட்கொண்டு தங்கள் கதையை முடித்துக் கொண்டனர் உயிருடன் இருந்த மற்ற விஞ்ஞானிகள் இதைப்பற்றிஎவரிடமும் தெரிவிப்பதில்லை என சபதமெடுத்துக்கொண்டனர். இரண்டாம் உலகப்போர் முடிந்த உடனேயே அமெரிக்க மேலிடத்திற்கு இதைப் பற்றி ரகசியத் தகவல்கள்கிடைத்தன. யூனிட் 731இன் தலைவராக இருந்த மேஜர் ஷீரோ இஷியை அமெரிக்கா தேட ஆரம்பித்தது. ஐந்து மாதத்தின் பின் அவர் பிடிபட்டார். அமெரிக்கர்கள் நடாத்திய விசாரணையில் இஷி, தான் தலைவராக இருந்த யூனிட் 731 நிறுவனத்தில் மனிதர்களுக்குச்செய்யப்பட்ட தசகக் கூறப்படும் கொடுமைகளை வன்மையாக மறுத்தார்.

ரஷ்யர்கள் போருக்குப் பின் இந்த இடத்தைக் கைப்பற்றுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே அங்கிருந்த ஆயிரக்கணக்கான மனித உடல்களை எரித்து விட்டார்கள். ரஷ்யர்கள் நடாத்திய விசாரணையிலும் எந்தத்துப்பும் கிடைக்கவில்லை. ரஷ்யர்கள் நடாத்தியவிசாரணையிலும் உண்மையை மறைத்து விட்டார்.

ஆனால் அமெரிக்கா அத்தோடு விட்டு விடுவதாக இல்லை. யூனிட் 731ஐச் சேர்ந்த மற்றவர்களையும் விசாரிக்க அனுமதி கோரியது. இனியும் உண்மையை மறைப்பது நல்லதல்ல என்றுணர்ந்த ஷீரோ இஷி, போர்க்கால குற்றங்களில் இருந்து அவருக்கும் யூனிட் 731ஐச் சேர்ந்த மற்றவர்களுக்கும் விடுதலை அளிப்பதாக அமெரிக்கா எழுத்து மூலம் உத்தரவாதம் கொடுத்தால் உண்மை முழுவதும் கூறத் தயாராக இருப்பதாக தெரிவித்தார். இந்த விபரங்கள் 1947ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி அன்று அமெரிக்க மேலிடத்திற்கு மிக இரகசியமான தந்தி ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இஷி கூறுவது உண்மையா என்பதை ஆராய பென்டகன் ஜீவசாஸ்திர நிபுணர் ஒருவரை போர்ட் டெட்ரிக் என்ற இடத்திலிருந்து அனுப்பியது! இதைத்தவிர பிரபல டாக்டர்களான எட்வின்ஹில், ஜோசப் விக்டர் ஆகியோரும் இந்த ஆராய்ச்சியில் கலந்து கொண்டனர். விசாரணை 1947ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 12ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெற்றது.

விசாரணையில் வெளிப்பட்ட உண்மைகள். அதில் கலந்து கொண்ட டாக்டர்களையே திடுக்கிட வைத்தது. உலக வரலாற்றில் அதுவரை கண்டு பிடிக்கப்படாத மனித உடல்களைப் பற்றிய மருத்துவப் புள்ளிவிபரங்களை யூனிட் 731 விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். இக்கால கட்டத்தில் தான் அமெரிக்கா, இந்த மருத்துவ தகவல்களை தனக்கு சாதகமாக பயன்படுத்த முடிவு செய்து. மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்த பலரை தண்டனையிலிருந்து காப்பாற்றியது. மேலும் இந்த ரகசியங்களை ரஷ்யாவுக்கு தெரியாமல் அமெரிக்கா மறைத்து விட்டது.

இவ்வளவு தகவல்களையும் உள்ளடக்கிசெய்சிமோரிமாரா என்பவர் எழுதி வெளியிட்ட "டெவில்ஸ் கிளாட்டனி" என்ற புத்தகம் ஒரே வருடத்திற்குள் ஜப்பானில் மட்டும் 1.4 மில்லியன் பிரதிகள் விற்பனையாகின. இப்புத்தகம் வெளிவந்த பின்தான் ஜப்பான் அரசு யூனிட் 731 என்ற ஒரு நிறுவனம் இருந்த உண்மையை ஒப்புக் கொண்டது. தற்போது ஜப்பானில் மருத்துவ ஆராய்ச்சித் துறையில் மிகப் பிரபலமாக விளங்கிய ரையோசி நைடோ (உலகின் முதன் முதலில் செயற்கை ரத்தத்தைக் கண்டு பிடித்தவர்) மற்றும் இராடோபோ ஷிமுரா (மனித உடலில் குளிரால் ஏற்படும் விளைவுகளைக் கண்டவர்) ஆகியோர் யூனிட் 731 நாசகார கும்பலைச்சேர்ந்தவர்களே!

தொகுப்பு: க. சத்யப்பிரியா

---

# வட - இலங்கை நுண்கலை மன்றம்

## ஒரு குறிப்பு

'கல்லூரி' களில் பாடத்தோடு கீதம் கேட்கும். ஆனால் சிற்பமும், ஓவியமும் கல்வி நிலையில் பின்தங்கிய மாணவரின் பாடத்துறை என்று கூறி அதன் கலாம்சத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளக் கூச்சப்படுவதும் வழக்கமாகி விட்டது. சம்பிரதாய கர்நாடக சங்கீதமும், பரதமும் எங்கும் பரவி, அவற்றோடு மெல்லிசையும் சேரும் போது சிற்பமும் ஓவியமும், சித்திரமும் மறக்கப்படுகின்றன.

பள்ளிக் கூடத்தில் 'ந' எழுதி அதைக் காகமாக மாற்றும் பள்ளிச் சிறார்களைப்பார்த்து அவர்களுடன் நமக்கென்ன வேலை என்று ஒதுங்கிப்போகிறோம். அத்தனை அலட்சியம் காட்டும் நிலை. பாடசாலை மாணவர்கள் கோணல் மாணலாகக் கீறுவதில் எத்தனை அபிலாசைகள்வெளிப்படுத்தப் படுகின்றன என்பதினை நாம் உணர்வதில்லை. கலாரசனைக்கும் பஞ்சம் வந்து விட்டது போல நாம் நடந்து கொள்வதால், எம்மை அதிசயத்தில் ஆழ்த்தும் மாணவரின் கற்பனைவளம் சிதறிவிடுகின்றது. எமக்கு அந்நியமான செவ்வியல் கலைகளில் (Classical Arts) சாயல்களை வெளிப்படுத்துவதன் மூலம் 'கலைத் தொண்டு' செய்வதாக நினைத்துக்கொண்டு எமது கலாசாரத்தைக் கோரமாகக் கொச்சைப் படுத்தி வருகிறோம். கல்லூரிகளில் கதகளியில் ஆரம்பித்துக் குச்சுப்பிடி வரையில் போய் விட்டோம். சிற்பமும், சித்திரமும், ஓவியமும் இந்நிலையில் சாத்தியமா என்பது கேள்வி.

சிற்பமும், சித்திரமும், ஓவியமும் பொருளாதாரக் கஷ்டத்தில் வயிற்றுப்பிழைப்புக்காகச் செய்யப்படும் தொழிலாகக் கருதப்பட்டோ, என்னவோ பல்கலைக்கழக மட்டத்திலும், நிறுவக மட்டத்திலும் வளர்க்கப்படாதநிலையில்31-7-1988 இல் வேம்படி மகளிர் கல்லூரியில் கூட்டப் பெற்ற வட-இலங்கை நுண்கலை மன்ற அமைப்புக் கூட்டம் பொன் எழுத்துக்களால் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### நுண்கலை மன்றம் உதயம்

'வட - இலங்கை நுண்கலை மன்றம்' எனத் தமிழிலும், 'North Lanka Fine Arts Soci - ety' என ஆங்கிலத்திலும் பெயர் பெறும் இம் மன்றம், அரச திணைக்கள மையமாக இயங்காமல், கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலில் தனித்துவத்தைப் பேணுதல் இதன் சிறப்பு அம்சமாகும். எமது கலாசாரம் பிடித்தமானத்தோடு கூடிய சிற்பம், சித்திரம், ஓவியம் ஆகிய கற்கை நெறிகளின் வளர்ச்சி மையமாகவும் இது அமைந்துள்ளது. மாணவர் மற்றும் ஆசிரியர் மத்தியிலே இக் கலைகள் பற்றிய விழிப்புணர்ச்சியைஏற்படுத்தும் களமாகவும் செயற்படுகின்றது.

ஐம்பது வருட பாரம்பரியத்தைக் கொண்ட வட இலங்கைச் சங்கீதசபை இன்று மிருதங்கம், கர்நாடக சங்கீதம், பரதம், கதகளி, வீணை, வயலின், பண்ணிசை, நாடகமும் அரங்கியலும் ஆகிய உழைப்போடு இணைந்த கலைகளைப் பாடத்தோடு சங்கமமாக்கியுள்ளது. வட-இலங்கை சங்கீத சபையின் அரை நூற்றாண்டு காலச்சேவை ஒரு நம்பிக்கையின் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அதே போல் வட- இலங்கை நுண்கலை மன்றமும் சிற்பம், ஓவியம், சித்திரம் முதலாம் துறைகளில் வேகமான வளர்ச்சியின் ஒரு நடுநாயகமாக விளங்குகிறது. தவிர, கண்காட்சி, செய்திறன், கருத்தரங்குகள், பரீட்சைகள் போன்றவைகளால் ஆசிரியர் - மாணவர்களிடத்தில் இக் கலைகள் பற்றி ஓர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும் வட-இலங்கை நுண்கலை மன்றம் தன்னை வழிபடுத்திக் கொண்டு வருகிறது.

> எமது கலாசாரப் பிடித்தமானத்தோடு கூடிய சிற்பம், சித்திரம், ஓவியம் ஆகிய கற்கை நெறிகளின் வளர்ச்சி மையமாக வட - இலங்கை நுண்கலை மன்றம் அமைந்துள்ளது. கலை பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் களமாகவும் இது செயற்படுகின்றது.
>
> - மதன்

வட - இலங்கை நுண்கலை மன்றத்திற்கு வித்திட்டவர்களில் ஒருவரான (அன்றைய) பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் இக்கலைத் துறைகளின் நிலைகளையும், அவை அபிவிருத்தி செய்யப் படவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்திப் பேசினார். நிறுவக மட்டத்திலும், பல்கலைக் கழக மட்டத்திலும் சிரத்தையுடன் வளர்க்கப்படாத, தறுக்கணித்த நிலைமாற்றிஅமைக்கப்படத்தக்க விதத்தில் இதனை நல்ல மனத்துடன் வித்துவக்காய்ச்சல்களுக்கு இடமளிக்காத வகையில் எல்லோரும் ஒரு சேர நிறைவேற்ற வேண்டும் என்பதை எடுத்துக் கூறியதோடு. கலையுணர்வு பேணும் கலைத் திருவிழாக்களைக் கொண்டாடி கலைப் பொருள்களை ஜனரஞ்சகப் படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

வட இலங்கை நுண்கலை மன்றத்தின் நோக்கங்கள் யோசிக்கத்தகுந்தன. அழகியலையும் கலை நோக்கத்தையும் உள்ளடக்கியவை. ஆனால் இந்த நிஜங்கள் சில பின்தள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் உணர முடிகிறது. இன்றைய வரலாற்று நிர்ப்பந்த நிலையில் இந்தப் பின்னடைதற்கான காரணங்களை எட்டியவரை தேடினால் பொருளாதாரத்தடை மற்றும் போக்குவரத்துத் தடை கூட வட இலங்கை நுண்கலை மன்றத்தின் 'மயக்க' நிலைக்குக்காரணமாகலாம். இந்தப் பகைப் புலத்தில் சிற்பம், ஓவியம், சித்திரம் ஆகிய துறைகளுக்கு வட இலங்கை நுண்கலை மன்றம் ஆற்றிவரும் தொண்டையும் பாடசாலை மட்டத்தில் இப் பாடங்களைச் செம்மைப் படுத்தவும் இம் மன்றத்தினர் ஆற்றிவரும் பயன் பொருத்தமான பணியினையும் நாம் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

முதலாம் தரம் முதல் ஐந்

(9ஆம் பக்கம் பார்க்க)

யாமிருக்க முயலுமோ... பொம்பரும் வழியில் வருமோ...' பிள்ளையை அடித்து அடக்கி வளர்க்க வேணும் நீர் நல்லாய் இடம் கெடுக்கிறீர் கஷ்டப்படபோகிறீர் ...' எனப் பெரியவர்கள் குறை சொல்ல பொருட்படுத்தாமல் விட்டது பிழையோ?

ஆனாலும் நான் புறப்படுகிறேன். அவனும் தயார். சைக்கிளில் ஏறு போது ஹெலி மீண்டும் வருகிறது.
'கொஞ்சம் நின்று ஹெலி பலாலிப் பக்கம் திரும்பின பிறகு போங்களன் நவாலி வெளிக்குள்ள அகப்பட்டால் வில்லங்கம்.

மனைவி தயக்கமாய் குரல் கொடுக்க நான் அவனைப் பார்க்கிறேன்.

'நீ வா அப்பா...' செல்லத்தின் அருமையில் சொல்லிச் சிரிக்கிறான். அம்மா நீ கவனமாய் பதுங்கு குழியில் இரு நாங்கள் போட்டு வாறம்.

இருவருமாய் கையசைத்துப் புறப்பட்டு, பரிசளிப்பு விழாவில் கலந்து பரிசு பெற்று வீடு திரும்புகிறோம்.

இப்பதான் எனக்கு நெஞ்சுக்கை தண்ணி வருது 'தாய் மகனைக்கட்டியணைத்து முத்தமிடுகிறாள்.

'ஏனம்மா பயந்தனீ?'

'உன்னைநினைச்சுத்தான் .. உங்களை நினைச்சுத்தான்...'

'பயந்தா பரிசு வாங்க முடியுமே...? அம்மா ..?'

பயந்தால் பரிசு வாங்க முடியுமே ? அவனுடைய வார்த்தைகள் .. அதன அர்த்தங்கள் விசுவரூபமெடுக்கின்றன எங்கோ மலையில் மோதி திரும்பித் திரும்பி வருமாப் போல செவிப்பறையில் மீண்டும் மீண்டும் வந்து தாக்குகின்றன.

வழியில் வாகனமொன்றில் நாங்கள் கண்ட இளம் வீரன் 'அப்பா, உவருக்கும் என்ரை வயதுதான்இருக்கும் போலை' என்று என் மகன் வியந்த விதம்... உவையெல்லாம் பயந்தா நாங்கள் இப்பிடி போக முடியுமே அப்பா' என தொடர்ந்து அவன் கேட்ட கேள்வி...

என் மகன், இந்த இளஞ்சந்ததி பயமில்லாதது.

அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே என உரக்கக்கூவி உயர்ந்து நிற்கக் கூடியது.

அவர்கள் துணையில் எங்கள் பயங்கள் அழிகின்றன.


## ரேஸ்ரி பழப்பான விற்பனையாளர்களுக்கு

உங்களுக்கு தேவையான பழப்பானங்களை
பின்வரும் எமது முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
வடமராட்சியில்
சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி
தென்மராட்சியில்
அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி 6384)

## உணவு 'பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(சி-6366)

## ஜெசித்தாரா உணவகம்

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின் தரமிகு சுவையான உணவுப் பார்சல்கள் பகல் 11-30 மணிமுதல் பிற்பகல் 3-30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்:

விலை விபரம்:

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
எமக்கு வேறு கிளைகள் இல்லை.
(சி-6367)

## யாழ் நகரில் ...

20 வருடங்களுக்கு மேலாக
இணையற்ற சேவையாற்றும்
ஒரே ஒரு கல்வி நிறுவனம்

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

O/L - 93
பகல் நேர வகுப்பு
(வாரத்தில் 4 நாட்கள்)
காலை 8.00—பி.ப 1.00

- முதற் பிரிவு ஆரம்பித்து ஒரு வாரத்தினுள் அடுத்த புதிய பிரிவு (அதே ஆசிரியர்குழு)
- இதற்கு மேல் புதிய பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

19-ம் தேதிக்கு முன் பெயர்களை பதியுங்கள்

(சி-6435)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
## இராசம்மா பொன்னம்பலம்

மண்ணில் 06-04-1908
விண்ணில் 17-03-1993

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவரும் திரு. பொ. கந்தசாமி, பிரதிச்செயலாளர் நீர்ப்பாசனம் வட - கிழக்கு மாகாண சபை திருக்கோணமலையைச் சேர்ந்தவரினதும் அன்புத் தாயாராகியதிருமதி இராசம்மா பொன்னம்பலம் அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

நீர்ப்பாசனத்திணைக்கள ஊழியர்
முத்துஐயன்கட்டுப் பிரிவு.

ஒட்டுசுட்டான்
19-04-1963
(4685)

## அன்னை பூபதியின்
# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு:
19-04-1988

இம்மண்ணின் விடிவிற்காய் உயிர் நீத்த
மாமணிக்கு எமது இதய அஞ்சலிகள்.

தென் மட்டுவில்
**வளர்மதி**

சன சமூக நிலையம்
கல்வி நிலையம்
கிராம அபிவிருத்திச் சங்கம்
மாதர் சங்கம்
விளையாட்டுக் கழகம்

முக்கிய குறிப்பு: அன்னை பூபதி நினைவாக இன்று வளர்மதி நிலைய அங்கத்தவர்களின் சிரமதானப்பணி இடம் பெறும்.

வளர்மதி நிலைய நிர்வாகிகள்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(4681)

## முதலாண்டு நினைவஞ்சலி



## திரு. முதலியார் ஆறுமுகம்

மண்ணில்:- 05-07-26
விண்ணில்:- 26-04-92
திதி:- 16-04-93

ஆறிரண்டு மாதங்கள் அகன்றிடினும் உம் நினைவோ
அகலவில்லை ஐயாவே...
தலைவனாய் தந்தையாய் தக்கதொரு மாமனாய்
பாசமிகு பாட்டனாய் பாரிதனில் வாழ்ந்தீரே...
பரிதவிக்க வைத்து எம்மை நீர் பரமனிடம் சென்றீரோ..
நீர் வாழ்ந்த காலத்தின் நிகழ்வுகள் மனதினிலே
நித்தமும் வந்து மோதி நெஞ்சமதை நெகிழ்குதையா...
இறைவனின் இன்னடியில் இனிதே வாழ்ந்திருக்க
எந்நாளும் இறைஞ்சுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், சகோதரர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.

இல: 596/2 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[4698]

# வேட்டையாடும் பொலிஸாரை வேட்டையாடும் 'காட்டு ராஜா'

## வீரப்பன் பற்றி சில சுவையான தகவல்கள்

தமிழக, கர்நாடக மாநிலங்கள் எல்லையில் வீரப்பன் வைத்த நிலக்கண்ணி வெடியால் பாலாறு காட்டுப்பகுதி மட்டும் அதிரவில்லை. இரு மாநில அரசுமே அதிர்ந்து போயுள்ளன. கடந்த மூன்று வருடங்களாக வீரப்பன் என்கிற தனிமனிதன் விடுகின்ற சவால்களை முகங் கொடுக்கவோ முறியடிக்கவோ முடியாமல் இந்த இரு மாநிலஅரசுகளுமே திணறிக் கொண்டு இருக்கின்றன. வழமை போல புலிகளே கண்ணிவெடிக் கலாசாரத்தைப் புகுத்துகின்றார்கள் என வாழப்பாடி பல்லவி பாட, ஜெயலலிதா உடன் மறுக்க, இந்த வாதப் பிரதிவாதங்கட்கிடையில் ஒரு உண்மை வெளியானது. வீரப்பனைப் பிடிக்கவென்ன தமிழக அரசால் விசேடமாக உருவாக்கப்பட்ட வனப்படையின் பொறுப்பதிகாரி கோபாலகிருஷ்ணன் தன்னோடு அழைத்துச் சென்றகுழுவில் அக்காட்டுப் பகுதியை நன்கறிந்த வீரப்பனுக்கு நம்பிக்கையான கால்நடை மேய்ப்போர், விறகு வெட்டி பிழைப்போர் போன்றோரும் [வீரப்பனை அடையாளம் காட்ட] பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு பலிகொடுத்த விடயம்தான் அது.

இரு மாநிலங்களின் காவல் துறையால் வீரப்பனைப் பிடிக்க முடியாவிட்டால் ஏன் இன்னமும் இராணுவத்தின் உதவி நாடப்படவில்லை என்கிற வினா எழுவது நியாயம். 1990ஆம் ஆண்டிலிருந்தே இராணுவத்தை அழைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இன்று வரை அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. விமானங்கள் உதவியோடு சுற்றிவளைத்து இராணுவம் மூலம் வீரப்பனைப் பிடித்தாக வேண்டும். உலங்கு வானூர்திகள் தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்கிற ஆலோசனைகள் எல்லாம் வெறும்பேச்சுக்களாகவேஇருக்கின்றன. இப்போதுகூட ஜெயலலிதாஇந்தியஇராணுவத்தை அழைத்தால் வேறு வில்லங்கங்கள், சங்கடங்கள் நேரும் என்கிறார். தனது கட்சிக்கு வரப்போகும் சங்கடங்களையும் அல்லது தமிழக மக்களுக்கு நேரக்கூடிய தொல்லைகளையாஅவர் மனதில்வைத்து இப்படிக் கூறினார் என்பது தெரியவில்லை. ஏனென்றால் கரையோரக் கண்காணிப்பு என்கிற பெயரில் தமிழக கரையோரங்களில் உள்ள பாதுகாப்புப்படையினரால் தமிழக மக்கள் படும் இன்னல்கள் அதிகரித்து வருகின்றன.

யார் இந்தவீரப்பன்? இவன் பின்னணி என்ன? என்கிற கேள்விகள் இப்போது மிக முக்கியம் பெறுகின்றன. ஏனென்றால் வீரப்பன் உயிரோடு பிடிக்கப்படுவதைக் கர்நாடக, தமிழக மாநில உயர் காவல் துறை அதிகாரிகள், கட்சி அரசியல் வாதிகள் பலர் விரும்பவில்லையென கூறப்படுகின்றது. சிலமாதங்கட்கு முன்கூட 'ஒகனேக்கல்' அருகில் சின்னாற்றங்கரைஎனும் இடத்தில் அரசு அதிகாரிகள் பெங்களூர் பிரமுகர்கள் பலரை அழைத்து "வீரப்பன்விருந்துகொடுத்து" அவர்கள் ஒத்துழைப்பைக் கோரியதாக தகவல். இவ் விருந்தில் தமிழக காவல்துறை அதிகாரியொருவரும் கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. தற்போது ஜெயலலிதா அமைச்சரவையில் மிக முக்கிய அமைச்சர் ஒருவர் வீரப்பனோடு முன்னர் தொடர்புடையவர் என்று இப்போது நம்பப்படுகின்றது. தற்போது சேலம் மாவட்டத்தில் ஒரு முக்கிய அ. தி. மு.க. பிரமுகருக்கும் தர்மபுரி மாவட்டத்தில் முக்கிய காங்கிரஸ் புள்ளியொருவருக்கும் பலத்த காவல்துறை பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் முன்னர் வீரப்பனோடு தொடர்பு வைத்து பணம் சம்பாதித்து அரசியலுக்கு வந்தபின் வீரப்பனைக் கைவிட்டவர்கள் என்றும், இவர்கள் வீரப்பனால் கொலைசெய்யப் படவேண்டியோர் பெயர்பட்டியலில் உள்ளவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது. வீரப்பன் விவகாரத்தில் கர்நாடக மாநில அரசின் மீதே மக்கள் நம்பிக்கை இழந்திருப்பதாகவும் அதன் கையாலாகாத்தனத்தையும் பெருமளவு கண்டிப்பதாகவும் மக்கள் கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது. எனவே மீண்டும் கேள்வி எழும்புகின்றது. யார் இந்த வீரப்பன்?

வீரப்பன் வரலாறு பல பாடங்களைப் புகட்டுகின்றது. அவனது தொடக்ககால வரலாறு மிகச் சாதாரணமானது ஆனால் அண்மைக்காலமாக குறிப்பாக 1990-ம் ஆண்டின் பின் அவன் மேற்கொண்ட பல தாக்குதல் நடவடிக்கைகள் அவனைஒருஅசாதாரணமனிதனாக காட்டுவதோடு பெரும் அதிர்ச்சியினையும்வியப்பையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக 1990 ஏப்ரல்மாதம்ஒகனேக்கல் அருகில் மறைந்து தாக்கி நான்கு காவலர்களை கொன்றதில் இருந்து தொடங்கி பின் 1991 நவெம்பர் மாதம் அளவில் மிக பிரபல்யம் பெற்றிருந்த வன அதிகாரி சிறினிவாசனை கொன்றமை, 1992 மே மாதம் அளவில் இராமபுரம் காவல் நிலையத்தைத் தாக்கி ஐந்து காவலர்களைக் கொன்று, 18 துப்பாக்கிகளை அபகரித்தமை, பின்அதே வருடம் கர்நாடக அரசுக்குப்பேரிடியாய் விழுந்த கர்நாடக பொலிஸ் அதிகாரிகளான ஹரிகிருஷ்ணா, சகில் அகமது போன்றோரைப் பட்டப் பகலில் நேரடி மோதலில் கொன்றமை-இப்போது நிலக்கண்ணி வெடி - இதில் கோபாலகிருஷ்ணன்பலத்த காயமடைந்ததன் மூலம் தமிழக அரசுக்குப் பெரும் பின்னடைவு இவை எல்லாவற்றின் மூலமும் வீரப்பன் மதிநுட்பம், சங்கிலிப் பின்னல் போன்ற உளவாளிகள் அமைப்பு, மறைந்திருந்து தாக்கும் நேர்த்தியான உத்தி, சவால்விட்டே அதை நிறைவேற்றும் தீவிரம் எல்லாமே வியக்கப்பட வேண்டிய நிகழ்வுகள் ஆகிவிட்டன. வீரப்பன் பிடிக்கப்பட முடியாதவன் என்ற எண்ணமே இப்போது தென்னிந்திய மக்கள் மனதிலே தோன்றிவிட்டது.

எவரின் கண்ணிலும் படாத மிகவும் பின்தங்கிய தமிழக - கர்நாடக எல்லையில் உள்ள கிராமங்களில் கோவிநத்தமும் ஒன்று. இங்குதான் வீரப்பன் அவதாரம் எடுத்தான். இளமையில் கொடிய வறுமை, எல்லாவகையாலும் புறக்கணிப்பு. எனவே இப்படிப்பட்ட ஏனைய நூற்றுக்கணக்கான இளைஞர் செய்வது போலவே வீரப்பனும் யானைத் தந்தம் விற்க, சந்தனமரம் வெட்டத் தொடங்கலானான். அப்போது இந்த தொழிலில் ஏகபோகம் சேர்வைக் கவுண்டரிடம் இருந்தது. அவரே வீரப்பனின் குரு. இத்தொழிலின் நெளிவு சுளிவுகள் எல்லாம் அவரே கற்றுக் கொடுத்தார். மிக விரைவிலேயேகாவல்துறை வனஅதிகாரிகளை கையில்போட அரசியல்வாதிகளை அரவணைக்க வீரப்பன் பழகிக்கொண்டான். பின் கவுண்டர் இறக்கவே கவுண்டரால் வளர்க்கப்பட்ட தன்னைப்போன்றஇன்னொரு போட்டியாளனான கோட்டியூர் மாதமையாவை கொன்றொழித்து தானே முடிசூடிக் கொண்டான். தமிழக கர்நாடக அரசியல் வாதிகளின் ஆதரவோடு அவன் தொழில் படுவேகமாக வளர்ந்தது. அவனது சந்தன மரக்கடத்தல் சாம்ராச்சியம் கோவை, சேலம், ஈரோடு, தர்மபுரி, மைசூர், பெங்களூர், கூர்க் எனவிரிந்துள்ளது. இருமாநில எல்லையாலும் ஏறத்தாழ 6000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு அடர்ந்த காடு அவனது தொழிற்படுதளம். இப்பகுதி முற்றுமே அவனது உளவாளிகளால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனவே இங்கு நடைபெறும் எத்தகைய காவல் துறையின் நகர்வும் வீரப்பன் காதிற்கு உடன் எட்டிவிடும். சத்தியமங்களம்-பர்கூர்-சொய்யேகாய் என்கிற 2.5 இலட்சம் கெக்டயர் வரை பரந்துள்ள காட்டுத்தளம்வீரப்பனின்ஆளுமைக்குள் உள்ளது. காட்டின் குழந்தை அவன்: பெங்களூருக்கு போவதைத்தவிர காட்டைவிட்டு அவன் வேறெங்கும் போனது கிடையாது. காடே அவனது வீடு. இவ்வாறாக அவனுடைய தொழில் 1989-90-ம் ஆண்டளவில் உச்சம் பெற்றிருந்தபோது 2000க்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு சந்தன மரம் வெட்டல், கடத்தல், விற்றல் என பல்வேறு தொழில் வாய்ப்புகளை அவன் அளித்தான்.

இக்காலகட்டத்திலேயே மாநிலங்கட்கான சட்டசபைத் தேர்தல் நடைபெற்றன. சகல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகளும் வீரப்பன் தயவுவேண்டி அவன் பின்னாலேயே திரிந்தனர். தான்உழைத்த பணத்தில்பெரும்பகுதியை இப்பகுதி மக்கள் நன்மைக்காகவே அவன் செலவழித்தான். இப்பகுதி மக்கள் அவனை கிட்டத்தட்ட கடவுளாகவே வழிபட்டனர். பயத்தாலும், அவன் கொடுக்கும் உதவியாலும் வீரப்பனுக்கு எதிராகமாறுவோர் தொகை மிகக் குறைவே. அரசாங்கங்களின்புறக்கணிப்புக்கு மாற்றாகத் தனது ஆதரவு மூலம் மக்கள் மனதிலே இடம் பிடித்தான். எனினும் பதவிக்கு வந்த அரசியல்வாதிகள் சாயம் வெளுத்த பின் தனது தொழிலை முடக்க இவர்கள் நடவடிக்கை எடுத்தபின்னே வீரப்பன் மூர்க்கமானான். பொலிசாரைக் கொல்லத் தொடங்கினான். இவனுக்கு உதவியதாகக்கூறி காட்டுப்பகுதியில் நடைபெற்ற 70க்கும் மேற்பட்ட கல் உடைக்கும் குவாரி தொழில் நிலையங்கள் கர்நாடக அரசால் மூடப்பட்டன. இவையெல்லாம் வீரப்பன் மேல் மக்கள் வைத்த விசுவாசத்தைக் குறைத்ததாகவோ அல்லது வீரப்பனின் தாக்குதல் தீவிரம் குறைந்ததாகவோ தெரியவில்லை.

வீரப்பன் கர்நாடக வனஅதிகாரி சிறினிவாசனையும் பொலிஸ் அதிகாரி ஹரிகிருஷ்ணாவையும் கொன்ற விதமே இவற்றிற்கு நல்ல உதாரணம். அதிலும் குறிப்பாக சிறினிவாசனின் கதை பரிதாபகரமானது. இவர் ஒரு வித்தியாசமான அதிகாரி. வீரப்பனின் பலம் கிராம மக்களே என உணர்ந்து அம்மக்களோடு ஒரு மென்மையான அணுகு முறையைக் கையாண்டு அவர்கள் மனங்களை மாற்ற முயற்சித்தார்.

கிராமங்களில் தங்கி சுகாதார நிலையங்கள், சிறு பாடசாலைகள், ஆலயங்கள் போன்றவற்றை உருவாக்கி மாற்று வேலைவாய்ப்புக்களை உருவாக்க முயன்றார். வீரப்பன் ஊரானகோவிநத்தம் சென்றே வீரப்பன் உறவினர், சகோதரர்களோடு நட்பாகி வீரப்பனைச் சரணடையச் செய்ய முயன்றார். குறிப்பாக வீரப்பனது சகோதரர் அருச்சுனனோடு நெருங்கிப் பழகினார். தூது அனுப்பினார். 1991 நவெம்பர் மாதம் பத்தாம் திகதி வீரப்பன் சரணடைய விரும்புவதாக ஒரு தகவல் அருச்சுனன் மூலம் சிறினிவாசனுக்கு கிட்டியது. ஆர்வ மிகுதியோ, தனக்கே புகழ் வரவேண்டும் என்று கருதியோ மேலிடத்திற்கு அறிவிக்காது வீரப்பன்உறவினரோடுசென்ற சிறிநிவாசன் திரும்பிவரவேயில்லை. அருச்சுனனும் திரும்பிவரவில்லை. அவன் வீரப்பனோடு தங்கி விட்டான். தலை வெட்டப்பட்டு உடல் கருக்கப்பட்ட சிறினிவாசனின் உடலைக்கண்டு கிராம மக்கள் கண்ணீர் விட்டனர். சிறினிவாசனின்மரணத்தோடு அவர் தொடங்கிய சகல சீர்திருத்த முயற்சிகளும் கைவிடப்பட்டன சுகாதார நிலையங்கள் மூடப்பட்டு மருந்துகளும் எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. இதுபோலவே வீரப்பனின் கூட்டாளி என்று கருதப்பட்ட கமலநாயர் என்பவர்பேச்சைச் கேட்டு மாறு வேடத்தில் வியாபாரிகள் போல வேடம் இட்டுச்சென்ற ஹரிகிருஷ்ணா, சதிர் அகமதுவும் வீரப்பன் குண்டுகளுக்கு ஆகஸ்ட் 14, 1992 பலியானார்கள். ஒரு உண்மை வெளிப்படுகின்றது. யாரைப் பயன்படுத்தி வீரப்பனைப்பிடிக்க முயன்றார்களோ அவர்கள் எல்லாம் வீரப்பன் ஏவிவிட்டவர்கள் என்பது தான் அது, இவ்வாறாக 'இரட்டை உளவாளிகள்' நுணுக்கத்தைக் கூட வீரப்பன் பயன் படுத்தினான். இத்தாக்குதலில் வீரப்பன் பயன்படுத்திய ஆயுதங்கள், அவன் போரிட்ட முறை பதுங்கு குழிகள்அமைத்தவிதம் எல்லாமே பெரும் தொழில் நுணுக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. வீரப்பன் இத் தாக்குதலின் போது தமிழில் எழுதப்பட்ட துண்டுக் காகிதம் ஒன்றை விட்டுச் சென்றிருந்தான். அதில் எழுதப்பட்டிருந்ததாவது நீங்கள் என்னைக் கொன்று உங்கள் மார்புகளை தங்கப்பதக்கங்களால் அலங்கரிக்க விரும்புகிறீர்கள். இப்போது நான் பதக்கங்கள் தருகிறேன் அவை தங்கப் பதக்கங்கள். அல்ல குண்டுப் பதக்கங்கள். ஒரு தடவை கொலை செய்யப்பட்ட சிறினிவாசை, ஒரு பத்திரிகையாளர் கேட்டார். வீரப்பனைச் சுட்டுக் கொன்றால் பிரச்சினை தீர்ந்துவிடுமா? அதற்கு சிறினிவாசன், "நீங்கள் ஏன் அவனை சுடவேண்டும்? உயிரற்ற உடலை கைப்பற்ற வேண்டும் என விரும்புகிறீர்கள். முடிந்த வரை அவனை உயிருடன் பிடிப்பதுதான் என் இலட்சியம். உயிருடன் அவன் கிடைத்தால் தான் அவனது பின்புலம் என்ன? எந்தெந்த பெரிய புள்ளிகள் எல்லாம் அவனோடு தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்ற விபரம் வெளிவரும். இல்லாவிட்டால் எல்லாமே அவனோடு இறந்துவிடும்" என்றார். பிறகு கடுமையான சிந்தனையின் பின் அவர் கூறியதுதான் முக்கியமானது வீரப்பனோடு இவ் விடயங்கள் எல்லாம்முடிவுக்கு வரப்போவதில்லை. அவனைப் பிடிப்பது வேறு அவனது வாரிசு உருவாகாமல் தடுப்பது என்பது வேறு. ஏனென்றால் இன்னொரு வீரப்பனை இந்த பெரும் பண முதலைகள் மீண்டும் மிகச் சுலபமாக உருவாக்கிவிடுவார்கள்" என்றார். இன்று வீரப்பன் இருக்கிறான்; ஆனால் இதைச் சொன்ன சிறினிவாசன்தான் உயிரோடு இல்லை.

பாலகுமாரன்

---

## வட - இலங்கை

தாம் தரம் வரை (ஐந்து பரீட்சைகள்) பரீட்சைகளை வட-இலங்கை நுண்கலை மன்றம் நடாத்தி வருகின்றது. மூன்றாம் தரம் க.பொ.த (சா.த) தரத்தினை ஒத்தும், நான்காம் தரம் க.பொ.த(உ.த) ஒத்தும் ஐந்தாம் தரம் ஆசிரிய தரத்திலும் அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது. இன்று யாழ் பாடசாலைகளில் நிலவும் சித்திர ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நுண்கலை மன்றம் ஆசிரிய தரத்தில் பரீட்சைகளை நடத்தி அதன் பணியைச் செய்து வருவதை எம்மால் உணரமுடிகின்றது.

1988இல் இருந்து இன்று வரை-ஐந்து வருடகாலம் ஒரு சிறியகாலம் எடுத்த எடுப்பிலேயேவட இலங்கைநுண்கலை மன்றம் அதீதமாய் எதையும் சாதித்து விடவேண்டும் என்று முதன்மைப்படுத்தி நாம் யோசிக்கக் கூடாது. பின்னுக்குத் தள்ளப் பட்டிருந்த சிற்பம், சித்திரம், ஓவியம் போன்ற துறைகளை செம்மைப்படுத்தி குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு உந்தி முன்னே தள்ளியிருப்பதற்கு காரணமான அமைப்பு வட இலங்கை நுண்கலை மன்றம் என்ற மதிப்பீட்டை மறுக்க முடியாது. பெரிய கலைஞர்கள் என்று நினைத்துக் கொள்பவர்களுக்கு இது ஒரு சிறிய விஷயமாகப் படலாம். ஆனால், மாணவரின் கலைவண்ணம் வளர்வதற்கும், அவர்கள் தொடர்ந்து ஈடுபாடு கொள்வதற்கும் வட இலங்கை நுண் கலை மன்றம் செய்து வரும் காரியங்களை யோசித்தால், நியாயமான காரணங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தெரிய வருவதோடு, உண்மை மனப்போக்கையும் காண முடிகிறது. நுண்கலை மன்றத்தின் வளர்ச்சியில் பக்கபலமாக நின்று ஆற்றுப்படுத்தி வரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தனின் சுய ஆதங்கத்திலும், சம்பந்தப்பட்ட மற்றவர்களின் ஓவியப் புலமையும், ஞானமும் இம்மன்றத்தின் வளர்ச்சிகான காரணங்களில் முக்கியமானவை என்றுஅழுத்தமாகச் சொல்லலாம்.

### பண்டத்தரிப்பில்

மேலும் வடலியடைப்பு பகுதியில் 'புக்காரா' நடாத்திய தாக்குதல்களினால் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. சுமார் முப்பது அடி விட்டமும், 20 அடி ஆழமும் கொண்ட இப் பாரிய குழியை பெருமளவு மக்கள் சென்று பார்வையிட்டதுடன் பிரமித்து நின்றதையும் காண முடிந்தது. இதை அண்டி ஜெயரட்ணம். கௌசலாதேவி ஆகியோரது வீடுகளும் சேதமடைந்தன. நடராஜா என்பவரது வீட்டில் வீழ்ந்த குண்டினால் 10 அடி விட்டமுள்ள குழி ஒன்று காணப்படுகிறது.

இந்துக்கல்லூரி மீதான தாக்குதல்களினால் அருகிலிருந்த ஆனந்த குமாரசாமி, நடராஜா, ஆறுமுக தாசன் ஆகியோரது வீடுகள் சேதமடைந்துள்ளன.

சங்கானைப் பகுதியில் சிவப்பிரகாச வித்தியாசாலை முன்பாக டாக்டர் ராஜரட்ணம் வீட்டைஅண்டி நான்கு குண்டுகள்வீசப்பட்டதில்ஜெயராஜா, விஸ்வநாதன் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன. இதில் ஒரு குண்டு வெடிக்காத நிலையில் முற்றத்தில்புதைந்து காணப்படுகிறது. மதில்கள், கிணறு, நீர்த்தாங்கி ஆகியன சேதமடைந்துள்ளன. இப் பகுதியில் பயன்தரு மரங்கள் எரிந்து இப்பகுதி சாம்பராக காணப்படுகிறது.

இதேவேளை பண்டத்தரிப்பு பிரான்பற்று மக்கள் வாழ்விடங்கள் மீது பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அகோர எறிகணைத் தாக்குதல்களினால் பிரான்பற்று முருகமூர்த்தி கோயிலை அண்டி பூசகர் வீடு உட்பட பதினைந்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

சண்டிலிப்பாய் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளினால் சிறிகாந்தன் என்பவரது வீடு சேதமடைந்தது.

### இலங்கையர் மீது தாக்குதல்

(லண்டன்)

இத்தாலிய றோம் நகரில் இலங்கையரான முகதீன் நவுஸ் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் நவநாசிகளினால் தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேதின

புடைவை-நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முதலியனவற்றின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகத்தினரைக் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

### குடிமனைகள்

னம் ஜெயகாந்தன் (வயது 21) இராமசாமி கமலதாசன் (வயது 17). மகேந்திரா செல்வரூபன் (வயது 16), பாலசுந்தரம் புவனேஸ்வரி (வயது 28) ஆகியோர் உட்பட மற்றும் பலர் காயமடைந்தனர்.

மேலும் குண்டுவீச்சு விமானம் நடாத்திய குண்டுத் தாக்குதலின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சங்கானை மல்லாகம் வீதி, டார்சன் கிளினிக்கைச் சேர்ந்த ஆறுமுகம் இராசரத்தினம் (வயது 65), இராசரத்தினம் ஈஸ்வரி (வயது 52) இராசரத்தினம் டார்சன் (வயது 9), பண்டத்தரிப்பு பனிப்புலம் செட்டி குறிச்சியைச் சேர்ந்த அம்பலவாணர் மகாயோகதேவி (வயது 36), அ. கலாதேவி (வயது 26) ஆகியோர் காயமடைந்தனர். இதில் மகாயோகதேவி ஒரு காலை இழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு நவாலியைச் சேர்ந்த துரைசிங்கம் இராஜினி (வயது 16) என்பவர் எறிகணை வீச்சினால் காயமடைந்துள்ளார். [9,11,41,20,07]

## வீரச்சாவு



2-ம் லெப். சங்கிலி

விளான்பகுதியில் கடந்த 13 ஆம் திகதி ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தொன்றில் 2-ம் லெப்டினன்ட் சங்கிலி (அப்புத்துரை உதயதாசன், புன்னாலைக் கட்டுவன்) எனும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.



வீரவேங்கை மேகராஜ்

மட்டக்களப்பு போரதீவில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இராணுவ சுற்றிவளைப்பின் போது வீரவேங்கை மேகராஜ் (கந்தையா நேசராஜகுலசிங்கம், கோவில்போரதீவு மட்டக்களப்பு)எனும்போராளி சயனைட் அருந்திவீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பெற்றுக் கொள்ளவும்

575542816 V என்கின்ற இலக்கமுடைய கனகலிங்கம் நிர்மலா தேவி (வேலணை) என்பவருடைய அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

### இன்று

நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் ஆரம்பமாகும் இப் பேரணியினை அரசசார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்களும், சமூகசேவை அமைப்புகளின் தொண்டர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்பேரணியின் போது யு. என். எச். சி. ஆர். மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்ககுழு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், அரச அதிபர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படும்.

## வடபகுதி தபால்கள் மீண்டும் கடற்படையால் உடைப்பு

(யாழ்ப்பாணம்)

வட பகுதிக்கான வெளிநாட்டுத் தபால்கள் மீண்டும் கொழும்பில் வைத்து உடைக்கப்பட்டுஅனுப்பப்படுகின்றன.

கடைசியாகக் கப்பலில் கொண்டு வரப்பட்ட வட பகுதிக்கான வெளிநாட்டுக் கடிதங்களும் கொழும்பில் கடற்படை முகாமில் வைத்து உடைத்துப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வட பகுதிக்கான தபால்கள் இனிமேல் எக்காரணம் கொண்டும் உடைக்கப்பட மாட்டாதென்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சிறில் ரணதுங்கா தமக்கு உறுதி அளித்துள்ளதாக வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் சேதுகாவலர் மார்ச் நடுப் பகுதியில் தெரிவித்த பிறகும் கடிதங்கள் மீளவும் உடைக்கப்படுகின்றன.

உடைக்கப்பட்ட தபால்கள் குறித்து, சம்பந்தப்பட்ட கடிதங்களுக்கு உரிய விலாசதாரர்களை அஞ்சல் அலுவலகத்துக்கு அழைத்துக் கடிதங்களை அஞ்சலக அதிபர்கள் கையளிக்காமல், வழமை போல் விநியோகம் செய்வதால் தபாற்காரர் கஷ்டத்தில் மாட்டிக் கொள்ளும் நிலை ஏற்படலாம் என்று தபாற்காரர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை, நூறுக்கும் குறைவான தபால் பொதிகள் இம்முறை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டிருப்பது, தபால் பொதிகள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு உடைத்துப் பரிசீலனைக்கு உட்படுத்துவதையே காட்டுகிறது என்று அஞ்சல் அலுவலக வட்டாரங்கள தெரிவிக்கின்றன. ஒரு கிழமை இடைவெளியில் 200 தபால் பொதிகளும், ஒரு கிழமைக்கு மேல் 200 முதல் 400 தபால் பொதிகளும் இரண்டு கிழமைக்கு மேல் 400 முதல் 600 தபால் பொதிகளும் யாழ்ப்பாணம் அனுப்பப்பட வேண்டும் என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன,

### விமானம் நோட்டம்

சிறிலங்கா விமானப்படையினரது குண்டுவீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் நேற்றுக் காலை முதல் குடாநாட்டின் வான் பரப்பில் அங்கு மிங்குமாக பறந்த வண்ணமிருந்தன. காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை பருத்தித்துறை வல்வெட்டித்துறை, நெல்லியடி, தொண்டமனாறு போன்ற பகுதிகள் மீது அவ்ரோ விமானம் ஒன்று தாழப் பறந்து வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

## பிறந்த நாள் வாழ்த்து

### றொகான் இராஜசிங்கம் - மொகிரா வினோதினி

தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் அனோ நிதர்சன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கே. கே. எஸ். வீதி. மருதனார் மடத்தில் உள்ள சக்தி அகத்தில் கொண்டாடுகிறார். இவரை இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

தெல்லிப்பழை. கிறாஸ் கொப்பர்ஸ்
(சி-6440) விளையாட்டுக் கழகத்தினர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9049

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-8515, 26-6628, 42-3726, 42-3339, 26-9611, 28-3306, 42-1722, 26-4575, 41-6296, 43-4045, 43-0517, 24-3263, 27-9090, 41-8031.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-6024, 24-6448, 40-2829, 43-1857, 26-5848, 27-5912, 26-3654, 27-9661, 24-4465, 26-0989, 41-5583, 22-4895.

## மரண அறிவித்தல்

### திரு. கார்த்திகேசு அமிர்தலிங்கம்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த முன்னாள் வர்த்தகர் திரு. கார்த்திகேசு அமிர்தலிங்கம் அவர்கள் 15-04-1993 நேற்று மாலை சிவபதமடைந்து விட்டார். இவர் திருமதி பகவதி அம்மாளின் அன்புக்கணவரும், ஜெயராஜசிங்கம் - நீர்ப்பாசன இலாகா, (ஒட்டிசுட்டான்) துரைசிங்கம் - பொறியியலாளர் (கனடா), சரஸ்வதி பூபாலசிங்கம் (கனடா), மகாலட்சுமி [கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பத்மாதேவி, தினமணி, ரட்ணசிங்கம்-நீர்ப்பாசன இலாகா(வவுனியா), பானுமதி, கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனினி, உஷேந்தன் (U K.) ஜெயந்தன். சுதாஜினி, இலக்சி, டினேஷ், பிரதீபன், பிரணவன், பிரசாத், கிரிசாந், பிரியங்கா, மிதுரன், பிரியந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை சனிக்கிழமை (17-04-93) முற்பகல் 10.00மணிக்கு இலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பராய் கிழக்கு, தகவல்:
உரும்பராய். திருமதி அமிர்தலிங்கம்
[4699]

London Accountancy Classes

NOV - DEC 1993

C. I. M. A. STAGE I
A. A. T. PRELIM
INTER
I. A. B. FOUND
Inter
Finals (பின் அறிவிக்கப்படும்)

ஆரம்பம் 24th APRIL - 1993

மேலதிக விபரங்களுக்கு:

North Ceylon Technical Institute

(Result Oriented Institute in North)

14, St PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.

(சி/6420)

ஸ்ரீதர் திரையரங்கில்

100 RIFLES

(100 துப்பாக்கிகள்)

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

(சி-6376)

பதிவு செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

[சி-6438]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.